



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 11, இதழ் - 5 செப்டம்பர் - அக்டோபர் 2025

R4864

## THE CHURCH NOT A PART OF THE RANSOM
## மீட்கும் பொருளில் சபைக்கு பங்கில்லை

மீட்கும் பொருள் என்ற வார்த்தை வேத வாக்கியங்களில் இரண்டு பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று "எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1 தீமோத்தேயு 2:6) என்ற வசனத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அடுத்த வசனம் கூறுகிறதாவது: "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்." (ஓசியா 13:14) மீட்கும் பொருளில் சபைக்கு பங்கு இல்லை. இது 1 தீமோத்தேயு 2:6 இல் குறிப்பிடப்படவில்லை. மீட்கும் பொருள் என்பது நம்முடைய கர்த்தராகிய இயேசு மட்டுமே. அவர் அந்த விலைக்கிரயத்தை யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றது முதல் கல்வாரியில் தமது மரணம் வரையான மூன்றரை வருட காலப்பகுதியில் கொடுத்தார். அவர் பரத்திற்கு எழுந்தருளிச் சென்ற பிறகு மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தை முழு உலகத்திற்கும் பயன்படுத்தவில்லை. இன்னும் கூட அவர் அதை பயன்படுத்தவில்லை. எனினும் பிற்காலத்தில் அவர் அதை உலகிற்கு பயன்படுத்துவார்.

ஆனால் இந்த புண்ணியத்தை ஒரு சிறு மந்தைக்கு இப்பொழுது சாட்டிக்கொண்டிருக்கிறார். இதன் மூலம் இந்த வகுப்பார் பிதாவானவருக்கு பிரியமானவர்களாக இருந்து, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறவும் அவரோடு ஐக்கியம் கொண்டு, அவரது மகிமையிலும் தேவனுக்கும் மனிதருக்கும் இடையே மத்தியஸ்தராக அவரது அலுவலகத்தில் பங்கு பெறவும் செய்வார்கள். இப்படியாக சபையானது பாவ நிவாரண பலியில் பங்கு பெறுகிறது. எனினும் சபையானது மீட்கும் பொருளில் பங்கு பெறும் என்பதை இது குறிக்காது; ஏனெனில் ஒரு மனிதனுக்கு ஒரு மனிதன் தான் மீட்கும் பொருள், அநேகரல்ல. ஆகையால் பாவ நிவாரண பலியில் சபையின் பங்கை, கர்த்தரின் மீட்கும் பொருளின் கிரயத்தோடு குழப்பிக்கொள்ளக்கூடாது. பாவ நிவாரண பலியில் கூட சபையானது எந்த பலியையும் செலுத்துவதில்லை. பிரதான ஆசாரியன் காளையையும் ஆட்டையும் பலியாக செலுத்துவதாக நிழலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. பிரதான ஆசாரியன் காளையையும் உதவி ஆசாரியர்கள் ஆட்டையும் பலியிடுவதாக இல்லை. நாம் நம்மையே பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். அதிகபட்சமாக நம்மை பிரியமான பலியாக ஒப்புக்கொடுக்கிறோம்.பிறகு மகா பிரதான ஆசாரியர் ஆட்டினால் குறிப்பிடப்படுகிற இந்த வகுப்பாரின் பலி பிரியமானதாக ஆக்கப்படுவதற்கு தமது பலியின் புண்ணியத்தை போதுமான அளவுக்கு சாட்டுதல் பண்ணுகிறார்.

இப்படியாக நமது கர்த்தர் பாவ நிவாரண பலியில் பங்கு பெறுகிற அளவில் நாம் பங்கு பெறுவதில்லை. அவரது பலி இரு பாகங்களைக் கொண்டது. காளை மற்றும் ஆடு. இவை அவரையும் அவரது சீஷர்களையும் குறிக்கிறது. பிறகு எங்கே சபை தோன்றுகிறது? சபை அல்ல மானிடர்கள் என்று நாம் பதிலளிக்கிறோம். அவர்கள் தங்களை அர்ப்பணிக்கும் போது ஆட்டினால் குறிப்பிடப்படுகிறார்கள். நமது பலி நடைபெறும் போது, பிரதான ஆசாரியரின் சொந்த பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரது பலியில் நாமும் பங்கு பெறுவதாகக் கருதப்பட்டு அவரது அங்கங்களாகவும் அவரது உதவி ஆசாரியர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். அந்த நேரத்திலிருந்து, அவரது அங்கங்களாக அவரது எல்லா காரியங்களிலும் பலியின்படி வேறு விதங்களிலும் அவருடன் நாம் பங்கு பெறுகிறோம். ஆனால் பரிசுத்த ஸ்தலத்தில் நாம் தனித்துவத்தை பெறுவதில்லை. பரிசுத்த ஸ்தலத்தில் புது சிருஷ்டியானது, தெய்வீக திட்டத்தில் பிரதான ஆசாரியரின் வஸ்திரத்தின் கீழாக, அவரது புண்ணியத்தின் கீழாக அவரது அங்கமாக இருக்கிறது.

### நமது கர்த்தரின் கிரியையும் சபையின் கிரியையும்

சபையாகிய நாம், உதவி ஆசாரியர்களாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நமது கர்த்தரை பின் தொடர்ந்து சென்று, நிழலான பிரதான ஆசாரியன் காளையின் இரத்தத்தை தெளித்தது போல, நமது இரத்தத்தை மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெளிப்போம் என்று வேதவாக்கியங்களில் எங்கேயும் காணப்படவில்லை. மாறாக, பிரதான ஆசாரியன் முதலாவது காளையின் இரத்தத்தையும் பின்னர் ஆட்டின் இரத்தத்தையும் தெளித்தார். அதன் விளைவாக நாம், தனிப்பட்டவர்களாக மெய்யான இரத்தம் தெளிப்பதில் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. மகா பிரதான ஆசாரியரின் நாமத்தை எடுத்துக்கொண்டு அவரது அங்கங்களாவதால் மானிடர்களாக நமது தனித்துவம் இழக்கப்படுகிறது. ஆனால் திரைக்கு பின்னால் தனித்துவம் இல்லை என்று நாங்கள் அர்த்தப்படுத்தவில்லை. ஏனெனில் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று வேத வாக்கியங்கள் உறுதியளிக்கின்றன. (1 யோவான் 3:2) மகிமையான அலுவலகத்தில் தனித்துவத்தை பெற்றிருக்கமாட்டோம்

என்பதே கருத்து. ஏனெனில் ஒரே ஒரு மெல்கிசேதேக் ஆசாரியரே இருப்பார். மற்ற அனைவரும் காணப்படாதிருப்பார்கள். அங்கே ஆசாரிய அலுவலகம் மாத்திரமல்ல, ராஜரீக அலுவலகமும் இருக்கும். அவருடனான நமது உறவில் நாம் இரண்டிலும் பங்கு பெறுவோம். பாவநிவாராண பலியின் வேலையில் நமக்கு ஏதாவது பங்கு இருக்குமானால் தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து அவை அனைத்தும் கிறிஸ்துவுக்குள் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்துவின் வேலையில் உள்ளடக்கப்படுகிறது; நாம் அவருடைய அங்கங்களாக இருக்கிறோம். எந்த விதத்திலும் சபையானது பாவ நிவாரண பலியில் பங்கு பெறுவது நீதியை திருப்திபடுத்துவதற்கு தேவையில்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டும். ஏனென்றால் நம்மை கிறிஸ்துவுடன் மகிமை, உயர்ந்த சுபாவம் மற்றும் கிரியையில் பங்கு பெற அனுமதிக்கும்படி தெய்வீக திட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது. பாடுகளில் பங்குபெறுவது சபைக்கு ஒரு சலுகையாக இருக்கிறது. ஆனால் முற்றிலுமாக அவசியமற்றது. ஆகையால் கிறிஸ்துவும் இணைந்திருக்கும்படியான சலுகையை நாம் பெறும்படிக்கு ஆச்சரியமான கிருபை நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவரது மரணம், அவருடைய மரணம் மட்டுமே தெய்வீக நீதியை திருப்திபடுத்துவதற்கு அவசியமானதாக இருந்தது.

நமது சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும் வேலைக்கும் மகா பிரதான ஆசாரியனாக நம்மை பலியாக ஒப்புக்கொடுக்கும் கர்த்தரின் வேலைக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் மனதில் தெளிவாக பெற்றிருப்பது மிகவும் முக்கியமானது. நிழலில் காண்பிக்கப்பட்டது போல இரண்டு காரியங்களும் முற்றிலும் வேறானதாக காணப்படுகிறது. இங்கே ஆடானது கொண்டு வரப்பட்டு ஆசாரிப்புக் கூடாரத்தின் வாசலில் அர்ப்பணம் செய்யப்பட்டு கட்டப்பட்டது. அது நாம் செய்கிற பலியின் உடன்படிக்கையை சித்தரிக்கிறது. (சங்கீதம் 50:5; 118:27) ஆடானது இன்னும் பலி கொடுக்கப்படவில்லை. இந்த பலியை செலுத்த பிரதான ஆசாரியனைத் தவிர வேறு யாரும் தகுதியுடையவரல்ல. வேதத்தின் அடிப்படையில், பிரதான ஆசாரியன் ஆட்டை கொல்லுகிற வேலை மட்டுமே பலியாக இருக்கிறது.

நம்மை பிதாவானவருக்கு பிரியமான பலியாக ஒப்பு கொடுத்த பிறகும், புது சிருஷ்டிகளாகவும் கிறிஸ்துவின் சரீரத்தின் ஜீவனுள்ள அங்கங்களாகவும் ராஜரீக ஆசாரிய அங்கங்களாகவும் ஆன பிறகும் நம்மை அனுதினமும் ஒப்புக்கொடுக்கிற தொடர்ச்சியான வேலை போய்க்கொண்டிருக்கிறது. ஆகையால் கர்த்தராகிய இயேசு பலியிடும் வேலையை சுவிசேஷ யுகம் முழுவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறார். இந்த யுக முடிவில், கடைசியாக பலியை நிறைவு செய்வார். இவை அனைத்தும் ஒரே பலியாக கருதப்படும். புது சிருஷ்டிகள் அனைவரும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் அவரது சரீர அங்கங்களாக அனுமதிக்கப்படுவார்கள். தேவனுக்கு பிரியமான பலி சமர்ப்பிக்கப்படுவது தொடர வேண்டும். நமது விசுவாசமின்மையால் நமது கர்த்தர் பலியை கைவிட்டு நம்மை போகவிட்டால் நாம் முற்றிலுமாக தோல்வியடைவோம், பலியானது முழுமையடையாது.

### போக்காடு வகுப்பாரின் வேலை

சபையிடம் எந்த புண்ணியமும் இல்லை மற்றும் நீதியை திருப்திப்படுத்தும் வேலையில் சபையின் பலி எந்தவித தகுதியான வேலையையும் செய்யாது. அதற்கு கிறிஸ்துவின் புண்ணியம் மட்டுமே போதுமானது மற்றும் நாம் அர்ப்பணம் செய்த பிறகு நாம் தனிப்பட்டவர்களாக மறைந்து போவோம் என்பது உண்மையானால் திரள் கூட்டத்தைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? ஜனங்களின் மீறுதல்களும் அக்கிரமங்களும் போக்காட்டின் மேல் வைக்கப்படுகிறது. போக்காடு அந்த வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது. கர்த்தரின் ஆட்டைக் காட்டிலும் போக்காட்டில் அதிக செயல் திறனும் புண்ணியமும் இருக்கிறதா?

நாங்கள் இதற்கு பதிலளிக்கிறோம். பாவநிவாரண நாளின் பலிகளின் மூலம் பாவ நிவாரணம் நிறைவு பெறுகிறது. இந்த பலிகள் காளை மற்றும் கர்த்தரின் ஆட்டின் இரண்டு பலிகளாகும். இந்த இரண்டு மிருகங்களின் இரத்தத்தின் மூலம் ஆசாரியர்கள், லேவியர்கள் மற்றும் சகல ஜனங்களின் பாவங்களுக்கு நிவாரணம் செய்யப்பட்டது.

இரண்டு பாவ நிவாரண பலிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது பாவ நிவாரணம் முடிவடைந்தது. உண்மையான பொருளில் மனிதன் ஆதாம் மற்றும் அவரது இனத்தாரின் ஜீவனை ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விலைக்கிரயமாக வாங்கப்பட்டார்கள். திரள் கூட்டத்தாருக்கு பாவ நிவாரண பலியில் எந்த பங்கும் பாத்தியதையும் இல்லை. அவர்கள் சந்தர்ப்பத்தை பெற்றிருந்தார்கள். ஆனால் பலி முடிவடையும் வரை செல்வதில் தோல்வி அடைந்து விட்டார்கள். ஆகையால் ஆசாரியத்துவத்தை அடைவதிலும் தோல்வி அடைகிறார்கள். காளை மற்றும் ஆட்டினால் நிவாரணம் செய்யப்படாத ஜனங்களின் பாவங்கள் ஆதாமினால் வந்த பாவங்கள் அல்ல. பிறகு அவை என்ன பாவங்கள் என்பதே கேள்வி? நிவாரணம் செய்யப்படாத பாவங்கள் கண்டிக்கத்தக்கது. ஏறக்குறைய அறிவுடன் அல்லது பொறுப்புடன் செய்த பாவங்கள் என்று பதிலளிக்கிறோம். உதாரணத்திற்கு தீர்க்கத்தரிசிகளை கொன்றது மற்றும் நமது கர்த்தரை சிலுவையிலறைந்தது. ஓரளவுக்கு அறியாமை இருந்தாலும் யூதர்களும் அவர்களது தலைவர்களுமே தீர்க்கதரிசிகளின் மரணத்திற்கும் நமது கர்த்தரின் மரணத்திற்கும் மிகவும் பொறுப்பானவர்களாக இருந்தார்கள். இதே போல சுவிஷேயுகம் முழுவதிலும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு எதிராக வன்முறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. உலகமானது நீதிக்கு எதிராக இந்த சகல வன்முறைகளுக்கும் ஏறக்குறைய பொறுப்புடையதாக இருக்கிறது. இப்படியாக கர்த்தரால் அழைக்கப்பட்ட இந்த “சிறியவர்களுக்கு” விரோதமாக செய்யப்பட்ட காரியங்களிலிருந்து அவற்றை செய்த யாரும் விடுவிக்கப்படவில்லை.

கர்த்தரின் ஏற்பாட்டில் உலகத்தின் இந்த பாவங்கள், அறியாமல் செய்த பாவங்களை தவிர்த்து மற்ற பாவங்கள் கர்த்தருடைய ஜனங்களுக்கு எதிரான பாவங்கள் உலகத்தின் மேல் வரப்போகிற "மகா ஆபத்தின் நாளில்" தீர்க்கப்பட வேண்டும் அல்லது ரத்து செய்யப்பட வேண்டும். "திரள் கூட்ட" வகுப்பினர் விசேஷித்த சோதனையையும் பரீட்சையையும் பெறுவார்கள் என்பதும் பலியின் உடன்படிக்கையை விருப்பத்துடன் அவர்கள் நிறைவேற்றாததற்கு தக்கதாக ஆபத்தின் நாளில் இந்த சோதனைக்குள் தள்ளப்படுவார்கள் என்பதும் தேவனுடைய ஏற்பாடாக இருக்கிறது. எனவே அவர்களது மாம்சம் இந்த முறையில் அழிக்கப்பட வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடாக இருக்கிறது. கர்த்தர் இப்படியாக கூறலாம்: "இந்த "திரளான கூட்டத்தின்" வகுப்பாரை மகா ஆபத்தின் நாளில் பங்கு பெறவும் உலகினில் துன்பப்படவும் அனுமதிப்போம். அதன் மூலம் உலகத்தின் துன்பமானது குறையும்." இந்த கோட்பாடு இந்த யுக முழுவதும் "திரள் கூட்டத்தின் வகுப்பாருக்கு" பொருந்தும். அவர்கள் அனைவரது எண்ணிக்கை கடந்த காலத்தில் குறைவாகவும் இந்த யுக முடிவில் அதிகமாகவும் இருக்கும் என்பதை நாம் அறிவோம்.

மெய்யான பாவ நிவாரண நாளின் முடிவில் நம்மால் காணக்கூடிய காரியங்களை குறிப்பதற்காகவே நியாயப்பிரமாண நிழல்கள் ஏற்பாடு செய்யப்பட்டன என்பதையும், நடந்து கொண்டிருந்த காரியங்களை குறிப்பதற்காக அல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நிழலில் முதலில் லேவியர்கள் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். அதன்பிறகு சிலர் ஆசாரியர்களாக தெரிந்துகொள்ளப்பட்டார்கள். நம்மிடையேயும் இப்படியே இருக்கிறது. நாம் இன்றைக்கு ஆசாரிய வகுப்பாராக இருக்கலாம். ஆனால் பின்னர் நாம் நிலை நிற்குதலை இழந்து வெறும் லேவி வகுப்பாராக, ஊழியர் வகுப்பாராக ஆகலாம். நாம் கொஞ்ச காலம் "கர்த்தரின் ஆடு" வகுப்பாராக இருப்போம். பிறகு நமது பலியை நிறைவேற்றுவதில் அசட்டையாக இருந்து பலியின் வகுப்பாரில் நமது இடத்தை இழப்போம். நமது கீரிடத்தை வேறு ஒருவர் எடுத்துக்கொள்ளுவார். இப்படியாக நாம் "திரள் கூட்டத்திற்கு" தள்ளப்படுவோம். ஆகையால் இவைகள் இந்த யுகத்தின் முடிவில் இருக்கக்கூடிய பலன்களை குறிப்பிடுகின்றன. அங்கே "திரள் கூட்டம்" வகுப்பார் இருப்பார்கள். அவர்கள் குறிப்பிட்ட அக்கிரமங்களை சுமப்பார்கள்.

## நாம் தனிப்பட்டவர்களாக "பரிசுத்த ஸ்தலத்துக்குள்" நுழைய மாட்டோம்

நிழலில் உதவி ஆசாரியர்கள் பிரதான ஆசாரியரின் பிரதிநிதிகளாக இருந்தார்கள். அதில் அவர்கள் அவரது குமாரராக, அவரது குடும்பமாக, அவரது சரீரமாக இருந்தார்கள். அவர் காளையின் பலியை முடித்த பிறகு "மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்" நுழைந்த போது, அது நமது கர்த்தர் பரத்திற்கு எழுந்தருளி. பிதாவானவரிடம் தம்மை பிரசன்னமாகி, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து சபையின் பலி ஏற்றுக்கொள்ளப்படுவதை நிழலாக குறிப்பிட்டது. அர்ப்பணம் செய்த வகுப்பாரின் பலி கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுகிற போது, "நீங்கள் மரித்தீர்கள்" என்பது உண்மையாகிறது. மெய்யான ஆட்டின் ஜீவன் முடிவடைந்தது. "உங்கள் (புதிய) ஜீவன் கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது." (கொலோசெயர்: 3:3)

நாம் தனிப்பட்டவர்களாக பரிசுத்த ஸ்தலத்தில் நுழையவில்லை. நாம் அனுபவிக்கிற சலுகைகளும் ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நமக்கு உரியதாக இருக்கின்றன. வேத வாக்கியங்கள் ஆசாரியரைப் பற்றி குறிப்பிடும் போதெல்லாம் அது ஒரே ஒரு ஆசாரியரையே குறிப்பிடுகிறது. மற்றவர்கள் உதவிக்காரராக இருக்கும் சலுகை பெற்றவர்கள். ஆனால் அவர்கள் தனிப்பட்டவர்களாக ஆசாரிப்புக் கூடாரத்துக்குள் நுழையவோ, பாவ நிவாரண நாளில் பாவ நிவாரண பலி செலுத்தவோ இரத்தத்தை தெளிக்கவோ மாட்டார்கள்.

## நாம் ஒருவருக்கொருவர் நியாயத்தீர்ப்பு செய்யாதிருப்போமாக

"சிறு மந்தையாக" ராஜரீக ஆசாரியர்களாக இருக்கிறவர்கள் அவர்களது அர்ப்பணத்தின் நிபந்தனைகளின்படி நடப்பதில் தோல்வியடைந்தார்கள். ஆசாரியத்துவத்திலிருந்து நிராகரிக்கப்பட்டு, ஊழிய வகுப்பாராக சாதாரண லேவியராக ஆகிறார்கள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். "திரள் கூட்டம்" வகுப்பிற்கு தள்ளப்பட்டவர்கள், ஆசாரிய வகுப்பிற்கு திரும்பவும் மீட்டெடுக்கப்படுவார்களா என்ற கேள்வி எழுகிறது. இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். பாவ நிவாரண பலியின் சித்திரம், மெய்யான பாவ நிவாரண நாளின் முடிவில் இருப்பதை நிழலாக காண்பிக்கிறது. இருதயத்தை அறிகிற தேவன், உண்மையான "ஜெயங்கொள்ளுகிறவனாக" இருக்கக்கூடிய சரியான ஆவியை பெற்றிருக்கவில்லை என்று ஒருவன் காண்பிக்கிற வரை அவனை ஊழிய வகுப்புக்கு தள்ளமாட்டார். ஒரு முறை தீர்மானம் கொடுக்கப்பட்டால், முன்னறிந்த தெய்வீக ஞானம் அதை மாற்றாது. ஒரு நபர் மணவாட்டி வகுப்பில் ஒரு இடத்திற்கு தகுதியில்லை என்று தவறாக அவரால் தீர்மானிக்க இயலாது.

பலியின் வகுப்பில் இருப்பவர்கள் தாங்கள் தியாகம் செய்வதையும் கர்த்தருடனான அவர்களது உறவையும் அறிய வேண்டும். அவர்கள் மற்றவர்களைத் குறித்து நேர்மறையாக இல்லாவிட்டாலும் தங்களைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். திரள் கூட்டம் வகுப்பில் இருக்கப்போகிறவர்கள் தீர்மானிக்க முடியாதவர்களாக இருப்பார்கள். எனினும் ஒரு காரியத்தைக் குறித்து தீர்மானிக்க சில ஆதாரங்கள் தேவைப்படுவதாக தெரிகிறது. உதாரணத்திற்கு வெளிப்படுத்துதல் 18இல், "அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற அழைப்பைக் கேட்ட பிறகும் பாபிலோனிலேயே இருக்கும்படி முடிவு செய்பவர்களைக்

குறித்து காண்பிக்கிறது. தேவனுடைய அழைப்பை புரிந்து கொண்ட பாபிலோனில் இருக்கக்கூடிய எந்த சகோதரனாவது, சகோதரியாவது கீழ்ப்படிய வேண்டும் என்று நாம் தீர்மானிக்கலாம். தற்கால சத்திய வெளிச்சத்தை உணர்ந்து கொண்ட அனைவரும் இதைச் செய்வது கடமையாக இருக்கிறது. இவர்களில் யாராவது, இந்த சூழ்நிலைகளின் கீழ், பாபிலோனிலேயே காலவரையின்றி இருந்தால், பலி கொடுக்க போதுமான தைரியம் இல்லாததும், மனிதர்கள், குடும்பம் மற்றும் மற்றவர்களின் அங்கீகாரத்தை விரும்புவதுமே காரணமாக இருக்கும். இவைகள் அவர்கள் வழியில் நின்று, அவர்களது கர்த்தருடன் கனம், மகிமை, சாகாமையை அடைய முடியாதபடி தடை செய்கிறது. இப்படிப்பட்டவர்கள் ராஜ்ய மகிமையில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏனெனில் ஜெயங்கொள்ளுகிறவர்களின் ஆவியை போதுமான அளவு பெறவில்லை. அவர்கள் இந்த ஆவியை பெற்றிருக்கிறார்கள். ஆனால் போதுமான அளவு அல்ல. இவர்கள் வெதுவெதுப்பாக இருக்கிறார்கள்.

எனினும் கர்த்தருடைய ஜனங்கள், ஜனங்களை தீர்மானிப்பதற்கு காலத்தையும் கவனத்தையும் கொடுக்க வேண்டும். நமக்கு தெரிந்த பிரியமான சகோதரனோ அல்லது சகோதரியோ பேர் சபையில் இருந்தால் அவர்கள் அதிலிருந்து வெளியே வரும்படி விரும்ப வேண்டும். ஆனால் அவர்கள் "திரள் கூட்டம்" வகுப்பில் இருக்கிறார்கள் என்று தீர்மானிப்பதற்கு தகுதியுள்ளவர்கள் அல்ல என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையில் கொஞ்ச காலம் இருப்பவர்கள் திடீரென்று வெளியேறி ஆச்சரியமான தைரியத்தை அதன் பிறகு காண்பிக்கலாம்.

**R4865**

## BLESSED ARE THE PERSECUTED
## துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்

எரேமியா 37

"என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். " மத்தேயு 5:11

"துன்புறுத்தல்" என்பது துன்பத்தப்படுகிற நபரோ அல்லது பொருளோ பயப்படக்கூடிய குணங்களையோ அல்லது சக்திகளையோ பெற்றிருக்கிறது என்று பொருள்படுகிறது. துன்பப்படுத்துதல் மதத்திற்காக இருக்குமானால், துன்பப்படுத்துகிறவர் பகுத்தறிவு முறையில் விவாதங்களை சந்திக்க பலவீனமாக இருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. துன்பப்படுத்துகிறவர்கள் பலவீனராகவோ அல்லது துன்பப்படுத்தப்படுகிறவர் விவாதம் பண்ணுவதில் பலமுள்ளவராகவோ இருக்கிறார் என்பதை குறிக்கிறது.

துன்பப்படுத்துதல் என்பது பழங்காலத்தில் இருந்தே இருந்து வந்திருக்கிறது. காயீன் தனது சகோதரன் ஆபேலை துன்பப்படுத்தினான். ஏனெனில் ஆபேல் நல்லவன். காயீன் பொல்லாதவன். துன்பப்படுத்துகிறவர்கள் தவறானவர்களாகவே இருப்பார்கள் என்று கூறிவிடலாம். எனினும் துன்பப்படுத்தப்படுகிறவர்கள் எப்பொழுதுமே சரியானவர் என்று கூற இயலாது. துன்பப்படுத்துதல் என்பது எப்பொழுதுமே தவறான செயல். ஆகையால் ஒருவர் இன்னொருவரை சரீர பிரகாரமாகவோ அல்லது அவதூறு அல்லது வசை மொழி மூலமாக துன்பப்படுத்த விரும்பும் போது அவன் தனது இருதய நிலைமையை உடனே ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏனெனில் அதில் தவறு நிச்சயமாக இருக்கும். சரீர பிரகாரமாகவோ, அவதூறான வார்த்தைகளினாலோ ஒருவரை துன்புறுத்துவதை பார்க்கும் போது, உடனே துன்புறுத்துகிறவர் தவறு செய்கிறார் என்பதை தீர்மானித்து துன்பப்படுத்தப்படுகிறவருக்கு அனுதாபத்தை காண்பித்து மேலும் துன்புறுத்தப்படாதபடி பார்க்க வேண்டும். இப்படியாக அவன் தனது சிந்தையில் நியாயத்தின் கொள்கையை, நீதியின் கொள்கையை வளர்க்க வேண்டும். அது அவனது குணலட்சணத்தை அபிவிருத்தி செய்யும்.

### உண்மையுள்ள எரேமியா துன்புறுத்தப்பட்டார்

நமது இன்றைய பாடம் கர்த்தரின் விசுவாசமுள்ள தீர்க்கதரிசிகளில் ஒருவர் துன்புறுத்தலை சகித்தது நமது கவனத்தை ஈர்க்கிறது. அவர் மிகவும் உயர்ந்த தேச பக்தியுள்ளவர். அவர் தெய்வீக ஞானத்தின் திசையில் தனது தேசத்திற்கு நன்மையான காரியங்களை பார்த்தார். அவரது கொள்கை முதலாவது தேவன் என்பது. இந்த செயல் முறையே தனது தேசத்திற்கு தெய்வீக ஆசீர்வாதத்தை கொண்டு வரும் என்பதை அவர் அறிந்திருந்தார். ராஜா மற்றும் அவனது பிரதானிகளால் அவர் தவறாக புரிந்து கொள்ளப்பட்டார். அவர் உண்மையை தைரியமாக சொன்னதால் அவர்கள் அவரை விரும்பவில்லை. அவர்களது சொந்த ஞானம், மகத்துவம் மற்றும் அவர்களது கொள்கைகளின்படி சொல்லுகிற தீர்க்கதரிசிகளையே விரும்பினர்.

இந்த பாடத்தின் காலத்தில் சிதேக்கியா அரியணையில் இருந்தான். அவன் வட தேசத்தில் அரியணையில் இருந்த கல்தேய ராஜா நேபுகாத் நேச்சருக்கு அடிமைப்பட்டிருந்தான். தெற்கே எகிப்திலிருந்து உதவி வரும் என்று நம்பி, எரேமியா மூலம் கர்த்தரிடமிருந்து வந்த எச்சரிப்புக்கு எதிராக யூதேயா தேசம் கலகம் செய்தது. கல்தேயர்கள் முற்றுகையிட்டார்கள். எகிப்திய ராணுவம் யூதேயாவை காக்க புறப்பட்டது.

யூதேயாவின் முற்றுகை தற்காலிகமாக நீக்கப்பட்டு யூதேயாவின் நம்பிக்கை உயர்ந்தது. எனினும், யூதேயா ராஜ்யத்தின் முடிவு நெருங்கியிருக்கிறது என்றும் அவர்கள் பாபிலோன் தேசத்தால் விழுங்கப்படுவார்கள் என்று எரேமியா வலியுறுத்திக் கூறினார்.

சுய விருப்பம் உடைய ராஜாவும் ராஜகுமாரர்களும் எரேமியாவை தேச துரோகியாகவும் அவர்களது எதிரியாகவும் கருதினர். ஐயோ! தேசம் தேவனுடையது என்பதையும்

எரேமியா மட்டுமே மகா பெரிய ராஜாவுக்கு உண்மையுள்ளவராக நின்றார் என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். கல்தேயர்கள் எருசலேமின் முற்றுகையை நீக்கின போது, எரேமியா நகரத்தை விட்டு வெளியேறி, பென்யமீன் தேசத்தின் பகுதிக்கு சென்றார். அப்பொழுது அவர் தேச துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அவர் சொந்த தேசத்துக்கு எதிராகவும் கல்தேயருக்கு ஆதராவாகவும் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டார். எனினும் அவர் குற்றத்தை மறுத்தார். அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

எருசலேம் நிலத்திற்கு கீழே நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பெட்டகங்கள் நிறைந்ததாக இருந்தன. அவைகள் பாதாள அறைகள் என்று அழைக்கப்பட்டன. அவைகள் பஞ்ச காலத்திலும் முற்றிகை போடப்பட்ட காலத்திலும் பயன்படுத்துவற்காக கட்டப்பட்டிருந்தன. இந்த தொட்டிகள் நீர் எடுக்கப்பட்ட பிறகு இவைகள் ஆழமாகவும் சேரும் சகதியும் நிறைந்தாகவும் இருந்தன. அடுத்த அதிகாரமானது எரேமியா போடப்பட்ட நிலவறைகள் இருந்த பயங்கரமான நிலைமையை விளக்குகின்றன. நாம் வாசிக்கிறதாவது: “எரேமியாவை கயிறுகளினால் துறவிலே இறக்கிவிட்டார்கள். அந்த துறவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது. அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான்.” முடிவில் எரேமியாவை தூக்கிவிட்ட போது நாம் வாசிக்கிறதாவது: “கிழிந்து போன பழம் புடவைகளையும் கந்தை துணிகளையும் எடுத்துக்கொண்டு போய், அவைகளை கயிறுகளில் எரேமியாவின் அண்டைக்கு துறவிலே இறக்கி, அவனது அக்குள்களில் போடச் செய்து துறவிலிருந்து தூக்கிவிட்டார்கள்.” இந்த துறவிலே எரேமியா “அநேக நாட்கள்” இருந்தார்.

## துன்ப பயத்தினால் தீர்க்கதரிசியை காப்பாற்றவில்லை

தீர்க்கதரிசியை அனுதாபத்தினாலோ அல்லது நீதியினாலோ துறவிலிருந்து தூக்கிவிடாமல், ராஜா தேசத்தின் எதிர்காலத்தைக் குறித்து விசாரிக்கவே தூக்கிவிட்டார்கள். ராஜா எரேமியாவை வெறுத்து அவரது வார்த்தையை அங்கீகரியாமல் போனாலும், இருதயத்தில் அவர் யேகோவாவின் ஊழியக்காரன் என்றும் அவரது செய்தி உண்மையானது என்றும் பயந்தான்.

ராஜாவின் கேள்விகளுக்கு பதிலளித்த தீர்க்கதரிசியின் தைரியம் மெச்சத்தக்கது. அவர் முன்பு சொன்ன அதே வார்த்தைகளையே மாறாமல் அப்படியே சொன்னார். அவர் ராஜாவிடம் கனிவுடன் தவறான தீர்க்கதரிசனங்களுக்கு செவி கொடுக்க வேண்டாம் என்று கூறினார். தனது அறிக்கை உண்மையானது. ஏனெனில் அவைகள் கர்த்தருடைய வார்த்தைகள் என்றும் கூறினார்.

அதன்பிறகு அவர் கீழே உளையாயிருந்த துறவில் போடப்படாமல் முற்றத்தில் உள்ள சிறையில் கைதியாக வைக்கப்பட்டார். அவர் உயிர் காக்கப்பட தினமும் ஒரு ரொட்டித் துண்டு வழங்கப்பட்டது.

சிறைகளைப் பற்றியும் அவற்றின் சரீர பிரகாரமாகவும் மனதின் பிரகாரமாகவும் துன்பப்படுத்தும் முறைகள் பற்றியும் நினைக்கும் பொழுது, துன்பப்படுகிறவர் மனவேதனை மிகவும் அதிகமாக இருக்கும் என்பதை நாம் நினைவுகூருகிறோம். உதாரணத்திற்கு எரேமியா அவரது துறவிலே சந்தோஷமற்ற சூழ்நிலைகளில் இருந்தாலும் அவரது சிந்தை தேவனுடன் சமாதானமாக இருந்தது. ஆனால் அந்த ராஜா கல்யேதர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு கண்கள் பிடுங்கப்பட்டு ஒரு துறவிலே போடப்பட்டான். பரிதாபத்துக்குரியவன்! அவன் எல்லா வகைகளிலும் வெறுப்படைந்து, மானிட அனுதாபமும் இல்லாமல், சர்வ வல்லவருடன் ஐக்கியமும் இல்லாமல் அவன் பயங்கரமான துறவின் அனுபவத்தை பெற வேண்டியிருந்தது.

## தேவ கிருபை வல்லமையை அறிவிக்கிறது

நீதியினிமித்தம் சிறையில் போடப்பட்ட பரி.பேதுரு, யோவான், பவுல் மற்றும் சீலாவையும் நாம் நினைவு கூருகிறோம். அந்த துன்பங்களிலும் அவர்கள் களிகூறும்படி அவர்களில் கிரியை செய்த வல்லமையை உலகத்தினால் புரிந்து கொள்ள இயலாது. அவர்கள் சாட்டையடி பட்டு முதுகில் இரத்தம் ஒழுகிக் கொண்டும் கால்கள் கழு மரத்தில் கட்டப்பட்டும் இருந்த போது அவர்களால் தேவனை ஸ்தோத்தரித்து பாடல்களை பாட முடிந்தது. ஏனெனில் அவர்கள் நீதியினிமித்தம் துன்பப்படவும் கிறிஸ்துவுடன் பாடுபடும் சலுகையை அனுபவித்தார்கள். இப்படியாக கிறிஸ்துவின் பாடுகளில் ஒரு பங்கை நிறைவு செய்தார்கள். இப்படிப்பட்ட குணலட்சணத்தை நாம் வளர்க்க வேண்டும். வேதனை மற்றும் துன்பத்தின் மத்தியில் இப்படிப்பட்ட சந்தோஷமும் சமாதானமும் கர்த்தரின் மூலம் மட்டுமே வரக் கூடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நமது வசனத்தில் உள்ள ஆண்டவரின் வார்த்தைகள் நேற்றைக்கும், இன்றைக்கும் நாளைக்கும், தீமை ஆளுகை செய்ய அனுமதிக்கப்படும் வரைக்கும் பொருந்தும். “என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.” இந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரராயிருந்து அதை பெறுவது என்பது நீதியின் சத்துருக்கள் துன்பப்படுத்துவதற்கு தகுதியுள்ளவர்கள் என்று நினைக்கிற அளவுக்கு குணலட்சணத்தை பெற்று அதை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று பொருள். துன்பம் என்பது இந்த யுகம் முழுவதும் தேவனுடைய விசுவாசமுள்ள ஜனங்களுக்கு பங்காயிருக்கிறது. மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதின் கீழ், புதிய ஆளுகையின் கீழ் நீதிமான்கள் துன்பப்படுவது இயலாததாக இருக்கும். அப்போஸ்தலரின் வார்த்தையை கவனியுங்கள். “தற்காலத்தில் தேவ பக்தியாய் நடப்பவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்.” தேவ பக்தியாய் நடப்பது என்பது தீயவர்களிடமிருந்து விலகியிருப்பதும் சண்டையில் நாயகனாக இருப்பதும் அல்ல. நன்மைக்கு பாதுகாவலராக இருப்பதும் தீமைக்கு எதிராக இருப்பதும், நீதியின் ஊழியக்காரனாகவும் சிலுவையின் போர் வீரனாக இருப்பதுமேயாகும்.

# DARK PROPHECIES FULFILLED
# இருண்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின

எரேமியா 39

"உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்." எண்ணாகமம் 32:23

எரேமியா தீர்க்கதரிசி மூலம் தேவன் அனுப்பிய இருளான தீர்க்கதரிசனம் முடிவாக நிறைவேறியது. கல்தேயர் முற்றுகையிட்ட ஒன்றறை ஆண்டுகளுக்கு பிறகு கோட்டை சுவர் இடிக்கப்பட்டு திறப்பு கண்டது. நகரம் பிடிப்பட்டு சரணடைந்தது. சிதேக்கியா ராஜாவும் அவனது சிறிய படையும் தப்பித்து தெற்கு நோக்கி, யோர்தான் திசையில் ஓடினார்கள். கல்தேயர்கள் அவர்களை பிடித்தார்கள். அவர்கள் எருசலேமிலிருந்து சில மைல் தூரமுள்ள ரிப்லாவிற்கு கொண்டு செல்லப்பட்டு உண்மையில் சிதேக்கியாவை அரியணையில் வைத்த நேபுகாத் நேச்சரின் உடன்படிக்கையை மீறினதால் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

தண்டனையானது அந்த காலத்திற்கு ஏற்றதாக இருந்தது. இது இன்னும் இருக்கக்கூடிய சில வெற்றிப் பலகைகள் மூலம் விளக்கப்பட்டிருக்கின்றன. ராஜாவின் கண்கள் குருடாக்கப்பட்டு பாபிலோனுக்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டான். இப்படியாக இரண்டு விசேஷமான தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின. அவை நிறைவேறும் வரை முற்றிலும் முரண்பாடானதாக காணப்பட்டன. இதில் நாம் தீர்க்கதரிசனத்தை எவ்வளவு ஜாக்கிரதையாக தியானிக்க வேண்டும் என்ற பாடத்தை பெறுகிறோம். வெளிச்சத்திற்கு பதிலாக இருளைப் பெற்றாலும் அதன் ஒவ்வொரு காரியத்தையும் விசுவாசத்துடன் நம்ப வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்கிறோம்.

சிதேக்கியாவைப் பற்றிய இந்த தீர்க்கதரிசனங்களில் ஒன்று எசேக்கியேல் 12:10-13 இல் காணப்படுகிறது. இன்னொன்று எரேமியா 32:3-5 இல் காணப்படுகிறது. சிதேக்கியா ராஜா பாபிலோனுக்கு கைதியாக கொண்டு செல்லப்படுவான் என்றும் அங்கே வாழ்ந்து இறந்து விடுவான் என்றும் எசேக்கியேல் அறிவித்தார். நகரத்தைக் காணமாட்டான் என்றும் அறிவித்தார். எரேமியா எருசலேமின் வீழ்ச்சியை முன்னறிவித்தார். மேலும் சிதேக்கியா நேபுகாத் நேச்சரிடம் வாயோடே வாய் பேசும், அவன் கண்கள் இவன் கண்களைக் காணும். இது எசேக்கியாவின் தீர்க்கதரிசனத்திற்கு முரண்பாடாக காணப்படுகிறது. ஏனெனில் அவன் ராஜாவிடம் வாயோடே வாய் பேசும், அவன் கண்கள் இவன் கண்களைக் காணும் என்பது எசேக்கியாவின் அறிக்கைக்கு முரண்பாடாக இருக்கிறது. எப்படி அவனால் பாபிலோன் நகரத்தை காண இயலும்?

எல்லா காரியங்களும் நிறைவேறின. சிதேக்கியா ராஜா நேபுகாத் நேச்சாரை பலஸ்தீனாவின் ரிப்லாவில் பார்த்து பேசினான். அங்கே அவன் கண்கள் பிடுங்கப்பட்டு பாபிலோனுக்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டான். அவன் பாபிலோனிலே வாழ்ந்து மரித்தான். ஆனால் பட்டணத்தை அவன் பார்க்கவில்லை.

"மனந்திரும்புதலே அவனது ஒரே தோழனாக இருந்தது.
அவன் ஒரு மோசமான தோழனாக இருந்தான்."

### கடந்த காலத்தின் கொடுமைகள்

"சனகெரிப் ராஜாவினால் வாகீசில் பிடிக்கப்பட்ட கைதிகளில் சிலரை உயிருடன் எரிப்பதற்காக தரையில் முளையடித்து கட்டப்பட்டார்கள் என்றும் மற்றவர்களின் கண்கள் பிடுங்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொசாபாத்தில் உள்ள சிற்பத்தில் சர்கோன் ராஜாவே ஒரு போர்க் கைதியின் கீழ் உதட்டில் செலுத்தப்பட்ட ஒரு கொக்கியுடன் இணைத்துள்ள தோல் வாரை பிடித்திருப்பதை போல் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவன் முழங்காலில் நிற்கும் போது, அவனது கண்களில் ஈட்டி நுழைந்திருக்கிறது, மற்றவர்கள் சங்கிலியால் கட்டப்பட்டு உதட்டில் கொக்கி மாட்டப்பட்டு அவர்களது முறைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றவைகளில் ராஜாவே தனது ஈட்டியால் கொல்லுகிறான். இன்னொன்றில் தண்டனை அளிப்பவர் சுவற்றில் சங்கிலியால் கட்டப்பட்ட கைதியை தோலுரிக்கிறார். பெர்சியாவில் கைதிகளின் கண்களை குருடாக்கும் கொடுமையான வழக்கம் அதிகமாக நிலவியது. இது அநேக கிரேக்க வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிட்டிருக்கிறது, முன்பு துருக்கியில் ஒரு சுல்தான் பதவிக்கு வரும் போது தனது சகோதரனை ஒன்று விட்ட சகோதரனை கொல்லுவது அல்லது கண்களை குருடாக்குவது வழக்கத்தில் இருந்திருக்கிறது. ஏனெனில் தனது அரியணைக்கு ஆபத்தோ எதிரியோ இல்லாதிருப்பதற்காகவே ஆகும். நவீன பெர்சியாவில் கடந்த நூற்றாண்டில் கூட ஷாஷ்கள் (Shahs) தனது மற்ற தூர தேசங்களுக்கு தப்பிச் செல்லாத சகோதரர்களின் கண்களை குருடாக்குவது வழக்கத்தில் இருந்திருக்கிறது." – டிரிஸ்ட்ரேண் சட்டம்.-(Canon Tristran)

நமது முன்னோர் கூட ஒரு காலத்தில் நியதினால் விவரிக்கப்பட்டுள்ளது போல இதயமற்ற கொடூரர்களாகவும் காட்டு மிராண்டித்தனமாகவும் இருந்திருக்கிறார்கள். கிறிஸ்தவ தேசங்களை உயர்த்திய நாகரீகத்திற்காக, உயர்ந்த தள நாகரீகத்திற்காக, எதிரிகளை அனுதாபத்தோடு பார்க்கிற பெரும் தயாள குணத்திற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! நிலவறைகளுக்கு பதிலாக தற்காலத்தில் சிறைகள் சீர்திருத்தப்பட்டிருப்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! நமது இனம் பாவத்தில் கர்ப்பந்தரித்து துர்குணத்தில் உருவானதை நாம் படிப்படியாக உணருவதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! (சங்கீதம் 51:5) இதை உணர்ந்து ஒழுக்கக்கேடான மற்றும் சீரழிந்தவர்கள் மேல் அனுதாபப்பட உதவுகிறது. அவர்களது தவறை அங்கீகரிக்கிற அளவுக்கு அல்ல. ஆனால் உயர்வான சுய கட்டுப்பாட்டிற்கும் உயர்வான சிந்தனைக்கும் அவர்களை கொண்டு வருவதற்கும் உதவுகிற அளவுக்கு இருக்கிறது.

### இந்த நன்மதிப்பு யாருக்கு கொடுக்கப்பட வேண்டும்

ஆகையால் இந்த நன்மதிப்பை நாகரீக வளர்ச்சிக்கு கொடுக்கலாமா? இந்த நன்மதிப்பை எந்த சபைக்கோ, சபை பிரிவுக்கோ அல்லது கட்சிக்கோ நாம் கொடுக்க முடியாது. ஒவ்வொரு சபைப் பிரிவும் தனது பங்கிற்கு கசப்பு, மதவெறி, மூட நம்பிக்கை மற்றும் துன்புறுத்தல்களையும் காட்டியிருக்கிறது என்பதை நாம் நேர்மையுடன் அங்கீகரிக்க வேண்டும். இது அவர்களது ஒழுங்கிற்கு எதிரானதாகவே இருந்திருக்கிறது. "எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின்" (1 தீமோத்தேயு 2:6) உதாரணம் மற்றும் அவரது வசனத்தின் மூலமே நமது காலத்தின் நாகரீகம் உருவாக்கப்பட்டு நமக்கு வந்திருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். அவர் சொன்ன மாபெரும் சத்தியங்களாகிய நீதியை பேசுதல், சமாதானம், அன்பு, சத்துருவையும் சிநேகித்தல் போன்றவை நூற்றாண்டு காலங்களாக எதிரொலித்து வந்து கொண்டிருக்கிறது. அலுரது "ஆச்சரியமான ஜீவனுள்ள வார்த்தைகள்" உணர்வை ஏற்படுத்தியிருக்கின்ற குணலட்சண மறுரூபமாகுதலையும் அங்கும் இங்கும் விளைவித்திருக்கிறது.

வேதாகமத்திலிருந்து நமக்கு வந்திருக்கிற மாபெரும் சத்தியத்திற்கான நமது கடமையை அதிகமதிகமாக உணர வேண்டும். இந்த ஜீவனுள்ள வார்த்தைகளினிமித்தம் சண்டையிட்டு போராடுகிற சபைப்பிரிவுகளும் கட்சிகளும் மிகவும் குறைவாகவே உணருகிறார்கள்.

இப்படியாக நாம் படிப்படியாக, ஒரே கர்த்தர், ஒரே

விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், எல்லாருக்கும் ஒரே பிதாவும் தேவனும், பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையாகிய ஜீவனுள்ள தேவனுடைய ஒரே சபையும் உண்டு என்று வேதாகமம் அறிவிக்கிற சத்தியத்தை பகுத்துணர்வோம். சிறு மந்தையாகிய இந்த பரிசுத்தவான்கள் எல்லா சபை பிரிவுகளிலும் வெளியே சிதறிக்கிடக்கிறார்கள். இவர்கள் மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் உடன் சுதந்தரராக முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறும் வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கிறார்கள். இந்த மகிமையான ராஜ்யம் பூமியில் விரைவில் ஸ்தாபிக்கப்பட்டு நீதியை செயல்படுத்தும்.

**R4867**

## "OVERTURNED UNTIL HE COME"

## "அவர் வரும்வரை கவிழ்க்கப்பட்டிருக்கும்"

எசேக்கியல் 21:25-27

"தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தை தேடி, அதை தொடர்ந்து கொள்." சங்கீதம் 34:14

தேவன் நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேல் தேசத்தாரிடம் கொடுத்த போது அதன் விதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கூறினார். அதன் பேரில் அவர்கள் அவரது ஜனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் தெய்வீக தேவைகளுக்கு கீழ்ப்படிந்தால் சகலமும் அவர்களுக்கு நல்லதாக இருக்கும். அவர்கள் செல்வ செழிப்பான, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜாதியாக இருப்பார்கள். ஆனால், அதற்கு மாறாக தெய்வீக சட்டங்களை புறக்கணித்து விக்கிரக ஆராதனைக்காரர்களாக ஆனால் அவர்கள் தண்டனைக்காக அவர்களது சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். "ஏழு கால" தண்டனை அவர்கள் மேலும் கடந்து செல்லும். (லேவியராகமம் 26:18, 21, 24, 28)

ஆரம்ப முதல் முடிவு வரை தேவன் அனைத்தையும் நிச்சயமாக அறிந்தவராக இருக்கிறார்; எனினும் தெய்வீக பொறுமை, தேசத்தின் அனுபவம் முழுவதும் சிதேக்கியாவின் ராஜ்யம் கவிழ்க்கப்படும் வரை வெளிப்படுத்தப்பட்டது.தாவீதின் அரியணையில உட்கார்ந்தவர்களில் கடைசி ராஜா சிதேக்கியா ஆகும். தேசத்தின் நடைமுறைகளிலும் ராஜாக்களினிடத்திலும் தீமையானது எப்படி நன்மையை தொடர்ந்தது என்பதை நாம் பார்த்திருக்கிறோம்; எப்படி ஜனங்களை தண்டித்து மறுபடியும் மறுபடியும் விக்கிரக ஆராதனையிலிருந்து திரும்ப கொண்டு வந்தது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். இப்பொழுது மோசே மூலம் முன்னுரைக்கப்பட்டபடி தேசத்தின் ஆட்சி "ஏழு காலங்கள்" அல்லது ஏழு வருடங்கள் முழுவதுமாக கவிழ்க்கப்பட வேண்டிய நேரம் வந்திருந்தது. எனினும் இந்த விஷயத்தில் வருடங்கள் என்பது அடையாளமானதாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் ஏழு வருடங்களுக்கு மேலாக அநேகம் தடவை அடிமைப்பட்டிருந்தார்கள். இதை உண்மை என்று ஏற்றுக்கொண்டால் அடையாளமான இந்த ஏழு வருடங்கள் அல்லது காலங்கள் உண்மையில் எத்தனை வருடங்களைக் குறிக்கிறது?

வேதாகமமானது ஒரு வருடத்தை ஒரு நாளாக அடையாளமாக சொல்லுகிறது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை. யூத வருடமானது, ஒவ்வொன்றும் முப்பது நாட்களைக் கொண்ட பன்னிரெண்டு மாதங்களை உடையதாக இருந்தது. அடையாளமான ஒவ்வொரு வருடமும் முந்நூற்றி அறுபது வருடங்களை உடையதாக இருந்தது. ஆகையால் ஏழு கால தண்டனை என்பது 7×360=2520 வருடங்கள் ஆகும்.

ஆகையால், மேசியா வரும்வரை ராஜ்யத்தை "கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்" என்று நாம் வசிக்கும் போது கவிழ்க்கப்பட்ட வருடங்கள் மொத்தமாக 2520 வருடங்கள் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது கிமு 606. (இது ஜனங்கள் எருசலேமிற்கு திரும்பி போவதற்கு அனுமதி அளித்து கோரேஸ் ராஜா பிரகடனம் செய்த வருடம் கிமு 536க்கு70 வருடங்களுக்கு முன்னர் ஆகும்)

### உண்மைகளைக் குறித்த ஒரு பார்வை

தெய்வீக கணிப்புகளின் நிறைவேறுதலை கவனிப்பது வேத மாணவர்களுக்கு எப்பொழுதும் ஆவலானதாகவும் பிரயோஜனமானதாகவும் இருக்கிறது. அது விசுவாசத்தை நிலைநிறுத்துகிறது; அது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் மிகவும் மெய்யானதாக ஆக்குகிறது; அது இஸ்ரயேலின் காரியங்களில் தெய்வீக மேற்பார்வையை நமக்கு உறுதிப்படுத்துகிறது. இப்படியாக, சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலரின் காரியங்களிலும் தெய்வீக மேற்பார்வையை நமக்கு உறுதிப்படுத்த காரணமாயிருக்கிறது.

நாம் சரித்திரத்தை பின்னோக்கி பார்க்கும் போது இஸ்ரயேல் தேசம் கவிழ்க்கப்படும், கவிழ்க்கப்படும் என்கிற பிரகடனம் நிறைவேறியதை நாம் காண்கிறோம். கோரேஸ் ராஜா மூலம் அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு (கிமு 536) 600 வருடங்கள் தேசம் இருந்தது. எனினும் தெய்வீக வாக்குத்தத்தின்படி தாவீதின் சந்ததியின் ஆளுகை செய்யாமல், புறஜாதி தேசங்களின் ஆளுகையில் இருந்தது. அது குறித்து எழுதப்பட்டிருப்பதாவது: "புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்." சிலர் மெக்கபேயர்களின் ராஜாக்களை சுட்டிக்காட்டலாம், அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களோ அல்லது ராஜ குடும்பமோ அல்ல என்று நாங்கள் பதிலளிக்கிறோம். சிலர் இயேசுவின் காலத்தில் ஏரோது ஆளுகை செய்ததைக் குறிப்பிடலாம், அவர்கள் தாவீதின் வழியில் வந்தவர்கள் அல்ல என்று நாம் பதிலளிக்கிறோம். அவர்கள் ஏதோமியர்கள் அல்லது ஏசாவின் வழியில் வந்தவர்கள். அவர்கள் இஸ்ரயேலின் பிள்ளைகளை ரோம சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இருந்து ஆளுகை செய்தார்கள்.

### புறஜாதியாரின் காலம்

தேவன் உலகில் தாவீதின் குடும்பம் என்று குறிப்பிடப்பட்ட தம்முடைய நிழலான ராஜ்யத்தை, இஸ்ரயேலின் நிழலான ராஜ்யத்தை நீக்கின போது, அவர் பூமிக்குரிய ஆளுகையை புறஜாதிகளுக்கு கொடுத்தார். இந்த குத்தகையின் அதிகாரம் தானியேலின் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டது போல, "ஏழு காலங்கள்" அதாவது 2520 வருடங்கள் தொடர வேண்டும். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் அதே காலப்பகுதியில், "ஏழு கால" இன்னல்களையும் அடிமைத்தனத்தையும் அனுபவிக்க வேண்டும். புறஜாதிகள் "ஏழு காலங்கள்" செழிப்பாக இருப்பார்கள். இரண்டுமே ஒரே சமயத்தில் அதாவது கிமு 606லிருந்து 2520 வருடங்களுக்கு பிறகு கிபி1914 அக்டோபரில் முடிவுக்கு வரும். இது புறஜாதியார் காலத்தின் முடிவு. இந்த தேதிகளின் துல்லிய தன்மைக் குறித்து யாராவது தகராறு செய்தால், நாம் அது குறித்து சண்டை போட அவசியமில்லை. இதில் ஏதாவது வித்தியாசமிருந்தால் ஒரு வருடம் அல்லது 20 வருடங்கள் இருக்கலாம். இது ஒரு சிறிய வேறுபாடாக இருக்கலாம்.

இதில் விசேஷித்த ஆவலான காரியங்கள் என்னென்ன, இந்த நீண்ட காலப்பகுதி நிறைவடையும் போது என்ன நடக்கும்.

(1) இஸ்ரயேலின் காரியத்தில் உண்மைகள் முன்னரே நாம் கவனித்தது தான். தேசம் அடிபணிதல் கிட்டத்தட்ட 700 வருடங்கள், தேசம் 1800 வருடங்களுக்கு மேலாக நாசமானது. புறஜாதியார்களைப் பொருத்த வரை கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி சுபிட்சமான காலம்:

பாபிலோன் – முதலாவது உலக பேரரசு

மேதோ, பெர்சியா – இரண்டாவது உலக பேரரசு

கிரேக்கம் – மூன்றாவது உலக பேரரசு

ரோம் – நான்காவது உலக பேரரசு

இந்த காரியத்தைக் குறித்த வேதவாக்கியங்களின் கண்ணோட்டத்தில் நான்காவது உலக பேரரசாக போப்பரசும் உலக கிறிஸ்தவ அரசாங்கங்களும் இன்னும் குறிப்பிடப்படுகின்றன. தேவனுடைய நிழலான ராஜ்யமாகிய இஸ்ரேயலின் ராஜ்யம் அடிமைப்பட்டு கவிழ்க்கப்பட்டு போன பிறகு இந்த நீண்ட காலத்தில் புறஜாதி ராஜ்யங்கள் ஆளுகை செய்து செழித்திருந்தன.

(2) “ஏழு காலங்கள்” முடிந்த பிறகு (2520 வருடங்கள், கிபி. 1915) மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். இஸ்ரயேலின் பிள்ளைகள் அங்கீகரிக்கப்பட்டு, பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.

அக்டோபர் 1914, கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். சிலர் யூகிப்பது போல பூமியனாது வெந்து உருகிப் போகாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, உலகத்தை ஆசீர்வதிக்கும் வேலையை செய்ய வேண்டியிருக்கும். “உலகத் தோற்றம் முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்களின்” ஆரம்பத்தை அது குறிக்கும். (அப்போஸ்தலர் 3:19-23)

R4867

## INERESTING QUESTIONS
## ஆவலைத் தூண்டும் கேள்விகள்

### பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் பிரகாரத்தில் குறிப்பிடப்படவில்லை

**கேள்வி :** ஆசாரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினால் பழைய ஏற்பாட்டு பாத்திரர்கள் குறிப்பிடப்பட்டார்களா?

**பதில் :** அவர்கள் காலத்தில் மெய்யான ஆசாரியன் வந்திருக்கவில்லை. மெய்யான ஆசாரிப்புக் கூடாரமும் பிரகாரமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் அவர்களது இருதய நிலைமை, அவர்களது நடத்தையில் வெளிப்படுத்தப்பட்டது போல் அவர்கள் விசுவாச வீட்டாரின் அங்கங்களாக இருக்க வேண்டும். முடிவாக அவர்கள் திரளான கூட்டத்தில் மெய்யான பிரகார நிலைமையில் மெய்யான லேவியர்களாக ஒரு பங்கை பெறுவார்கள் என்பது எங்களது புரிந்து கொள்ளுதல் ஆகும்.

### பலியானது இரு வெவ்வேறான கருத்துகளில் பயன்படுத்தப்பட்டது

**கேள்வி :** “ஏனென்றால் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனால் கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே சுட்டெரிக்கப்படும்.” (எபிரேயர் 13:11) இது பாவ நிவாரண பலி மகா பரிசுத்த ஸ்தலத்தில் செய்யப்படுகிறதை காண்பிக்குமா?

**பதில் :**வேதாகமத்தில் ஆசாரிப்பு கூடாரத்தைக் குறித்து மொழி பெயர்த்தவர்கள் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த இடங்கள் முதலானவைகளை சரியாக மொழி பெயர்க்காதது போல் தெரிகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் பல்வேறு பகுதிகளை குறித்த இந்த பதங்கள் யூதர்களால் பல்வேறு உணர்வுகளில் பயன்படுத்தப்பட்டன என்பதை அவர்கள் உணரவில்லை. நமது இந்த வசனம் கீழே கொடுத்துள்ளபடி சரியாக மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். “எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவ நிவாரண பலியாக மகா பரிசுத்த ஸ்லத்துக்குள் பிரதான ஆசாரியனால் கொண்டு வரப்படுகிறதோ அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே எரிக்கப்படுகின்றன. ” பலி என்பது வேத வாக்கியங்களின்படி இரண்டு விதமான கருத்தில் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வார்த்தை ஒரு அர்த்தத்தில் நமது கர்த்தர், பிதாவின் சித்தத்துக்கு தம்மை ஒப்புக்கொடுக்கும் போது, ஞானஸ்நானத்தில் தம்மையே ஒப்புக்கொடுத்தார். யோர்தானில் தம்மை ஒப்புக்கொடுத்த போது அதுவே தம்மை பலியாக ஒப்புக்கொடுத்ததாக இருந்தது. அவர் தமது ஜீவனை கல்வாரியில் கொடுத்த போது அவர் தமது சரியான பலியை நிறைவேற்றினார். ஆனால் அவர் உன்னதங்களில் ஏறி தேவனுடைய சமூகத்தில் நமக்காக பிரத்தியட்சமாகி பாவ நிவாரண பலியை ஒப்புக்கொடுப்பது பிரதான ஆசாரியனுடையதாக இருந்தது. கிருபாசனத்தில் இரத்தத்தை தெளிப்பது மகா பரிசுத்த ஸ்தலத்தில் செய்யப்பட்டது. ஆனால் பாவ நிவாரண பலியை ஒப்புக்கொடுத்தது யோர்தானில் செய்யப்பட்டது. நிழலில் காளை பலியிடப்பட்ட போது நடந்தது.

### இரண்டு பலி பீடங்கள் மாறுபட்டன

**கேள்வி :** “நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளை புசிக்கிறதற்கு கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை.” (எபிரேயர் 13:10) இந்த வசனத்தின் பொருள் என்ன?

**பதில் :** இந்த வசனத்தில் அப்போஸ்தலர் லேவியரின் ஆசாரியத்துவத்தையும், ஆசரிப்பு கூடாரத்தில் அவர்களின் ஊழியங்களையும் அவர்கள் சமூகத்து அப்பத்தை சாப்பிடுகிற பரிசுத்த ஸ்தலத்தின் மேசையையும், மெய்யான ஆசரிப்பு கூடாரம் மற்றும் அதன் மேலான மேசையுடன் வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறார். இது தொடர்பாக அவர் கூறுவது என்னவென்றால், ஆரோனின் ஆசாரியத்துவத்தை பொறுத்த வரை சபை மாத்திரமல்ல நமது கர்த்தராகிய இயேசு கூட ஆசாரியராக முடியாது; ஆசாரியத்துவம் லேவி வம்சத்திலிருந்து வந்தது. இயேசு, யூதா என்கிற வேறு வம்சத்திலிருந்து வந்தவர். ஆகையால் இயேசு புவியில் இருந்தால் அவர் ஒரு ஆசாரியராக ஆகியிருக்க முடியாது. ஆனால் இப்பொழுது தேவன், மெல்கிசேதேக் என்கிற வேறொரு ஆசாரியத்துவ முறைமையை கொண்டு வரும் நோக்கத்தில் இருந்தார். இது குறித்து தாவீது கூறுகிறதாவது: “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலும் இருப்பார்.” (சங்கீதம் 110:4; எபிரேயர் 5:6) கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராயிருந்தால், அவர் ஆரோனின் முறைமையின் ஆசாரியராக இருக்க முடியாது.

பிறகு, நாம் ஆசாரியர்களாக நிழலான பரிசுத்த ஸ்தலம் அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல உரிமையில்லை என்பதையும், ஆரோனின் வீட்டார் நமது இடத்திற்கு வர உரிமையில்லை என்பதையும் காண்பிக்கிறது என்று அப்போஸ்தலர் ரூபகாரம் பண்ணியிருக்கிறார். நாம் நுழைகிற மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்குள் வர அவர்களுக்கு உரிமையில்லை. அவர்கள் ராஜரீக ஆசாரியர்களானால் அவர்கள் நுழையலாம். ஆனால் அவர்கள் ஆரோனின் ஆசாரியத்துவத்தில் நிற்பதால், அந்த சலுகை அவர்களுக்கு இல்லை. இப்படியாக அவர் ஆரோன் மற்றும் மெல்கிசேதேக்கின் முறைமைகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டை காண்பிக்கிறார். றாம் "மேலான பலிகளைப் பெற்றிருக்கிறோம்." நாம் மேலான ஊழியங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் மேலான இடத்தை பெற்றிருக்கிறோம். அவர்கள் பெற்றிருந்தது அனைத்துமே நிழலான தாழ்வானதாக இருந்தது.

### மகா பரிசுத்த ஸ்தலத்தில் சுகந்த வர்க்கம் நிறைந்திருத்தல்

**கேள்வி :** பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் ஆட்டின் இரத்தத்துடன் நுழைவதற்கு முன் அது தூபவர்க்கத்தால் நிறைந்திருப்பது அவசியமா?

**பதில் :** பாவ நிவாரண நாளில் தூபவர்க்கத்தை அர்ப்பணிப்பது பிரதான ஆசாரியன் சர்வ வல்லவரால் அங்கீகரிக்கப்படுவதற்கு அவசியமாக இருந்தது. மேலும் தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றுவதற்கு அவனது தகுதியை வெளிப்படுத்தினது. ஆகையால் இதைத் தவிர வேறு எந்த பலியும் அங்கு தேவை இல்லை. பாவ நிவாரண வேலைகள் அனைத்தும் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டது. உதவி ஆசாரியர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்வதாக காண்பிக்கப்பட்டால், அப்பொழுது ஒவ்வொருவரும் அங்கே நுழைவதற்கு முன்பு தூபவர்க்கத்தை செலுத்துவது அவசியமானதாக இருந்தது.

நாம் தனிப்பட்டவர்களாக அல்ல, ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்களாக நாம் குறிப்பிடப்படுகிறோம். ஆகையால் ஒரு தடவைக்கு மேல் தூபவர்க்கத்தை செலுத்துவது அவசியமல்ல. எனினும் தூபவர்க்கம் பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் இருப்பது அவசியம். பலியானது பரலோக பிதாவானவரால் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. எப்பொழுதும் பாராட்டப்படும்.

### இரண்டும் நீதிக்கு தொடர்பானவை

**கேள்வி :** நிழலில் தூபவர்க்கம் நீதியை திருப்திப்படுத்தியதா? இல்லையென்றால், நீதியை திருப்திப்படுத்துவது எப்படி நிறைவேற்றப்பட்டது? ஏன் தூபவர்க்கம் எரிக்கப்பட்டது.?

**பதில் :** தூப வர்க்கமும் இரத்தமும் நீதியை திருப்திப்படுத்த வேண்டியதாக இருந்தன. தூபவர்க்கம் கிருபாசனத்தை மூட வேண்டும் என்று நாம் வாசிக்கிறோம். (லேவியராகமம் 16:13) வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் தூபவர்க்கத்தின் புகை அங்கே செல்லாதிருந்தால் பிரதான ஆசாரியன் உயிரோடு இருந்திருக்கமாட்டான். நமது கர்த்தர் தமது ஜீவனை மீட்கும் பொருளாக கொடுத்திராவிட்டால், அவர் தமது ஜீவிக்கும் உரிமையை இழந்திருப்பார் என்று இது காண்பிக்கிறது. அர்ப்பணத்தில் இதை அவர் ஏற்றுக்கொண்டு அவரது பூமிக்குரிய உரிமைகளை அர்ப்பணித்திருந்தார். அது உண்மைத்தன்மையை நிரூபித்தால் அவர் திரைக்கு அப்பால் மேலான ஜீவனை பெறுவார். ஆகையால் நிழலில் பிரதான ஆசாரியன் திரைக்கு அப்பால் தனக்கு முன்பாக தூபவர்க்கத்தின் புகையை அனுப்புதல் நீதியை திருப்திபடுத்துதலை குறித்தது. அது அவருக்கு திருப்திபடுத்துதலை குறிக்கிறது. மேலும் அவர் தேவையான நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கிறார் என்று சாட்சிப்படுத்துகிறது.

ஆனால் சபை மற்றும் உலகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கு இது தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது, தூப வர்க்கத்தினால் அல்ல, இரத்தத்தினால் ஆகும்.

R4868

## HOW THE NEW CREATURE FULFILS THE LAW

## புது சிருஷ்டி எப்படி பிரமாணத்தை நிறைவேற்றுகிறது

பரிசுத்த பவுல் ரோமருக்கு எழுதின தனது நிரூபத்தில் பாவ நிவாரணம் குறித்து மிகவும் பின்னே சென்று அவரது பகுத்தறிவின்படியும், தர்க்கரீதியாகவும் கொடுக்கிறார். முதல் இரண்டு அதிகாரங்களிலும் பாவம் எப்படி உலகத்திற்குள் வந்தது என்பதைக் குறித்தும் ஏன் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் கறைபடிந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் குறித்தும் காண்பிக்கிறார். எனினும் சிலர் மிகவும் சீரழிந்த நிலையில் இருப்பதற்கு மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பதை ரூபகாரப்படுத்தாது. ஆனால் சில இனங்கள் மற்றவர்களைக் காட்டிலும் விரைவாக தீய வழிகளுக்கு சென்றன. அப்போஸ்தலர் மேலும் கூறுகிறதாவது: "நீ யூதனென்று பெயர் பெற்று, நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிறாய்." தேவன் நியாயப்பிரமாணத்தை யூதர்களுக்கு கொடுத்தார்; புற ஜாதிகளுக்கு அல்ல. ஆகையால் யூதர்கள் மட்டுமே அதன் ஆசீர்வாதத்தை அல்லது சாபத்தை பெற முடியும். ஆனால் யூதன் நியாயப்பிரமாணமே தன்னை நீதிப்படுத்த முடியும் என்று நினைத்தான். இந்த வழியில் தான் அவன் தடுக்கலடைந்தான். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுகிறதில்லை என்பதை யூதன் அறிய வேண்டும் என்பதை அப்போஸ்தலர் விரும்பினார். யூதர்கள் நித்திய ஜீவனை தேடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நியாயபிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தால் அது அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கும். ஆனால் தெய்வீக சட்டத்திற்கு அவர்கள் கீழ்ப்படிய இயலாததை அவர்கள் கண்டார்கள். ஆகையால் நியாயப்பிரமாணம் அவர்களுக்கு பிரயோஜனமற்றதாக இருந்தது. ஏனெனில் அது அவர்களுக்கு ஜீவனுக்கு பதிலாக மரணத்தைக் கொடுத்தது. அபூரணமான மனிதனால் தெய்வீக கட்டளையை கைக்கொள்ளமுடியாது.

ஐந்தாவது அதிகாரத்தில் பரிசுத்த பவுல் இரட்சிப்பு எப்படி வழங்கப்பட்டது என்பதைக் காண்பிக்கும்படி தொடருகிறார். நியாயப்பிரமாணத்திற்கு முன்பே பாவம் உலகத்தில் இருந்தது என்று அவர் தொடருகிறார். ஆனால் நியாயப்பிரமாணம் இல்லாத போது நியாயப்பிரமாண மீறுதல் இல்லை.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு யூதர்கள் உலகத்தாருடன் இரட்சிப்புக்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் நம்பிக்கையுடன் இருந்தார்கள். ஆனால் நியாயப்பிரமாணம் வந்தவுடன் அதை அவர்கள் கைக்கொள்ள முடியாததால், நீதிமானாக்கப்படுதலின் நம்பிக்கையை பொருத்தவரை முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. அதன் விளைவாக யூதர்கள் இரண்டு விதமான ஆக்கினைத் தீர்ப்பை பெற்றிருந்தார்கள். ஆதாமின் மூலம் வந்த ஆக்கினைத் தீர்ப்பு மற்றும் "நியாயப்பிரமாணத்தினால் வந்த ஆக்கினைத் தீர்ப்பு. நியாயப்பிரமாணத்தினால் சபிக்கப்பட்டது மற்றும் விழுகையினால் காயம் அடைந்தது." யூதர்களுக்கு நியாயப்பிரமாணம் ஜீவனுக்கான தெய்வீக ஆசீர்வாதத்தை கொடுக்க முடியவில்லை. ஏனெனில் அதன் தேவைகளுக்கு ஏற்ப அவர்களால் வாழ இயலவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

### இரண்டாது ஆக்கினைத் தீர்ப்புக்கு கீழாக யூதர்கள்

இந்த விவாதத்திற்கு தொடர்பாக, யூத ஜனங்களின் தேவனைப் பற்றிய மனப்பான்மைக்கும் மற்ற ஜாதிகளின் மனப்பான்மைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காண்பித்து பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது." தேவன் யூதர்களுடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கையை செய்திருந்தார். அதற்கு மோசே மத்தியஸ்தராக இருந்தார். இந்த உடன்படிக்கைக்கு கீழ்ப்படிவதின் மூலம் அவர்களது நித்திய ஜீவனை பெற வேண்டியவர்களாக இருந்தார்கள். நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுவதில் கஷ்டம் இருந்ததால் நித்திய ஜீவனை அவர்களால் அடைய முடியவில்லை என்பதை அவர்கள் காண வேண்டும் என்பதை அப்போஸ்தலர் விரும்பினார். இந்த நியாயப்பிரமாணத்தினால் தான் யூதர்கள் ஆக்கினைக்குள்ளானார்கள் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். தேவனுடைய வெறுப்பில் அவர்கள் இருந்தார்கள் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார்; நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்போம் என்று உடன்படிக்கை செய்து விட்டு அதில் தோல்வியுற்றது, மேலும் ஒரு ஆக்கினைத் தீர்ப்பை அவர்கள் மேல் கொண்டு வந்தது என்பதையும் அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். தீர்ப்பு தகப்பன் ஆதாம் மேல் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் இறந்து போனார்; அவர்களது பிள்ளைகள் அனைவரும் மரிக்கும் நிலையில் பிறந்தார்கள், சட்டப்படி மரித்தவர்கள். இப்படியாக யூதர்கள், உலகத்தாரை ஒப்பிடும் போது இரட்டிப்பாக தண்டனைக்குட்பட்டவர்கள். உலகத்தார் ஒரு கீழ்ப்படியாமையினால் பரம்பரையாக ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டிருந்தார்கள். யூதர்களுக்கு ஒரே ஒரு வழி மட்டும் தான் இருக்கிறது என்று காண்பித்த போது, சகல மனுக்குலத்திற்கும் ஒரு இரட்சகர் தேவை என்பதையும், யூதர்களுக்கு உலகத்தாரைக் காட்டிலும் இன்னும் ஒன்று தேவைப்படுவதாக அப்போஸ்தலர் காண்பித்தார். யூதர்கள் அதிகமான சலுகையை அனுபவித்தார்கள். ஆதலால் அதிகமான ஆக்கினைக்குள்ளானர்கள்.

புற ஜாதியினர் தேவனுடைய பார்வையில் தங்களைக் காட்டிலும் மோசமாக காணப்பட்டார்கள் என்று யூதர்கள் நினைத்தார்கள். உலகத்தாரை நினைத்துப் பாருங்கள். அவர்கள் விலக்கப்பட்ட மீன், பன்றி மற்றும் முயல்களை சாப்பிடுகிறார்கள் மற்றும் நாங்கள் செய்யாததை அவர்கள் செய்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது." இந்த நியாயப்பிரமாணத்தை மீறியிருக்கிறார்கள் என்று வேறு எந்த கோத்திரத்தாரிடமும் தேவன் குற்றம் சுமத்தவில்லை. நீங்கள் அநேகம் தடவை தேவனுடைய பிரமாணத்தை மீறியிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு கட்டளைகளை மீறினாலும், நீங்கள் முழு நியாயப்பிரமாணத்தையும் மீறியிருக்கிறீர்கள். நீங்கள் சில கட்டளைகளை கடைப்பிடித்தால் நித்திய ஜீவனை பெறுவீர்கள் என்று அல்ல, அனைத்தையும் கடைபிடித்தால் தான் நித்திய ஜீவன் அளிக்கப்படும் என்பதே தேவ திட்டம்.

அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறதாவது: மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் பிரமாணத்தை அறியாதவர்களையும் ஆதாமின் மீறுதலுக்கு ஒப்பாக பாவம் செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது. ஆதாமுக்குள் எல்லாரும் மரித்தார்கள். உலகமானது பொதுவான மரண தண்டனைக்குள்ளாக இருக்கிறது. அவர்களது சொந்த பாவங்களுக்காக அல்ல, ஆதாமின் மீறுதலினாலேயாகும். தேவன் யூதர்களாகிய நம்மை இந்த நிலைமையிலிருந்து நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஏற்பாட்டிற்குள்ளாக மாற்றினார். ஆனால் நாம் இந்த இரண்டாவது சோதனையிலும் தோற்று புற ஜாதியாரைக் காட்டிலும் அதிகமான ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறோம்.

இப்படியாக, புற ஜாதிகளுக்கு மாத்திரமல்ல, யூதர்களுக்கும் ஒரு இரட்சகர் தேவை, இஸ்ரயேலுக்கு வெளியே உலகத்தாருக்கு மாத்திரமல்ல, இஸ்ரயேலருக்கும் தேவை என்பதையும் நிரூபித்தார். இஸ்ரயேல், தேவனுடன் ஒரு விசேஷித்த ஏற்பாட்டிற்குள் இருந்ததால், அவர்களது மீட்புக்கு சில விசேஷித்த வேலை செய்யப்பட வேண்டியிருந்தது

பாவம் அறியாத கிறிஸ்து யூதர்களுக்காக சாபமாக்கப்பட்டார் என்றும் யூதர்களை ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து மீட்க ஒரு விசேஷித்த ஏற்பாட்டை தேவன் செய்தார் என்றும் அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார். கிறிஸ்து எப்படி யூதர்களுக்காக சாபமாக்கப்பட்டார் என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். (கலாத்தியர் 3:13,14) மரத்தில் தூக்கிப்போடுவது, நியாயப்பிரமாணத்தின்படி உச்சக்கட்ட தண்டனை. (உபாகமம் 21:23) கிறிஸ்து சாபமாக்கப்பட்டு சிலுவை மரத்திலே மரித்தார். (1 பேதுரு 2:24) இப்படிப்பட்ட மரணம் மற்ற உலக மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு அவசியமில்லாதிருந்தது; ஆனால் யூதர்களுக்கு அது அவசியமாயிருந்தது.

### "யார் என்னை விடுதலையாக்குவார்?"

ஒரு யூதன் நியாயப்பிரமாணத்தின் கீழாக இருப்பதை கருத்தில் கொண்டு இஸ்ரயேலின் நிலைமையை பரிசுத்த பவுல் ஏழாம் அதிகாரத்தில் விவரிக்கிறதாவது: யூதன் நியாயப்பிரமாணத்தை கடைபிடித்து மேற்கொள்ள

நினைத்தான். ஆனால் அந்த பிரமாணத்துக்கு அடிமையானான். அவனது சரீரத்தின் பலவீனத்தினால் அவனால் ஜீவனை அடைய முடியாமல் போயிற்று. பிறகு பரிசுத்த பவுல் கதறுகிறதாவது: "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" தேவனுக்கு ஊழியம் செய், உன் முழு மனதோடு மட்டுமல்ல, பூரணமாக செய் என்று கூறுகிற நியாயப்பிரமாணத்துக்கு கீழாக இருந்தார். அவரது மாம்ச பலவீனத்தினால் அவரால் இதை பண்ண முடியவில்லை. கஷ்டத்தை உண்டாக்கின இந்த மரண சரீரத்திலிருந்து யார் அவரை விடுவிக்க முடியும்? அவரது சிந்தை நீதிக்கு இலக்கணமாக இருந்தது. ஆனால் அவர் அபூரணராக இருந்தார். பிறகு அவர் மரண சரீரத்தின் ஆக்கினையிலிருந்து எப்படி அவர் விடுதலையானார் என்பதை நமக்கு கூறுகிறார். அதாவது விடுதலை இயேசு கிறிஸ்து மூலம் வந்தது என்று கூறுகிறார்.

இந்த விடுதலையை நாம் எப்படி பெறுகிறோம்? அர்ப்பணம் செய்து, கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினால் வந்த அனைவரும் மாம்சத்திற்கு மரித்தவர்களாகவும் புது சிருஷ்டியாக ஜீவனுள்ளவர்களாகவும் எண்ணப்படுகிறோம். ஆகையால் பரிசுத்த பவுல் மகிமை அடைந்தார். மாம்சத்தில் அல்ல, நியாயப்பிரமாணத்தில் அல்ல, கிறிஸ்துவில் மகிமை அடைந்தார். கிறிஸ்து அவரை அந்த மாம்சத்தின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவித்தார். யூதனாக இருந்தாலும் அல்லது ஆதாமின் சந்ததி யாராக இருந்தாலும் விடுவிப்பார்.

"என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை." அதாவது பூரணம் இல்லை என்று அப்போஸ்தலர் வசனம்18இல் கூறுகிறார். அது பாதத்திலிருந்து தலையின் கிரீடம் வரை அபூரணத்தை பெற்றிருக்கிறது. இஸ்ரவேலர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள நாடினாலும், அதை செய்ய முடியாததற்கு காரணம் மாம்சம் பலவீனமாக இருந்ததே ஆகும். ஆகையால் மாம்சம் அபூரணமானது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். புது சிருஷ்டியானது சரீரத்தை கீழ்ப்படுத்தி பாடுபடுகிறது. தெய்வீக நீதியின் நிலைப்பாட்டின்படி நாம் நீதியின்படி நடக்கிறோம். இனி பாவத்தின்படி அல்ல என்பதை நாம் உணர வேண்டும். நீதியின்படி நடக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. நாம் பூரண நீதியின் நிலைப்படி நடப்பதில்லை. ஆனால் அதன்படி நடக்க முயற்சிக்கிறோம். புது சிருஷ்டியானது மாம்சத்தின்படி ஊனமுற்றது, அப்போஸ்தலருக்கு உண்மையாயிருந்தது, கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் உண்மையாயிருக்க வேண்டும். நாம் எந்த நேரத்திலும் தேவனுடைய நீதியின் திட்ட அளவுக்கு வாழ்கிறோம் என்ற கருத்தை கொண்டிருப்போமானால், நாம் சரியான எண்ணம் கொண்டிருக்கவில்லை. தேவன் பத்து கட்டளைகளில் கொடுத்திருப்பதாக நாம் வாசிப்பதாவது: "கர்த்தராகிய உன் தேவனை உன் முழு மனதோடும் (கொஞ்சம் மனதோடு அல்ல) முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக; உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக." இது தான் நியாயப்பிரமாணத்தின் உண்மையான ஆவியும் அதன் தேவையுமாகும். பூரணமாக இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். அவனது அபூரணத்தில் மனிதனால் பிரமாணத்தை கடைபிடிக்க இயலாது. ஆகையால் தேவன் மீட்பையும் பாவ மன்னிப்பையும் தமது குமாரன் மூலம் அருளியிருக்கிறார். உலகமானது பொதுவாக இளைப்பாறுதலின் சந்தர்ப்பத்தை பெறும். படிப்படியாக அவர்களது மனம் சீர்திரும்பும். ஆனால் சபைக்கு வித்தியாசமான ஏற்பாடு இருக்கிறது. "பரம அழைப்பை" நாம் ஏற்றுக்கொண்ட பிறகு நாம் நமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறோம். பிறகு நமது பிரதான ஆசாரியன் நம்மை பலி கொடுக்கிறார்; தேவன் அதை நமது கர்த்தரின் சொந்த பலியின் ஒரு பாகமாக ஏற்றுக்கொள்கிறார். முடிவாக நாம் ஒரு ஆவிக்குரிய சரீரத்தைப் பெறுவோம். ஆதாமுக்கும் உலகத்திற்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியான மானிட சரீரத்தை அல்ல.

### கிறிஸ்து மூலமாக விடுதலை

எட்டாவது அதிகாரத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்துவுக்குள் வருகிற யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து தப்பிக்கும்படியான ஒரு வழி அருளப்பட்டிருப்பதை காண்பிக்கிறார். சபை வகுப்பாரைக் குறித்து அவர் கூறுகிறதாவது: "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்." சபையானது கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்பதாக சொல்லப்படுறது? அவர்களுக்கு "பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." (2 கொரிந்தியர் 5:17) மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறியிருக்கிறது.

நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் மற்றவர்களால் கைக்கொள்ள இயலாத வழியில் நாம் தேவனுடைய பிரமாணத்தை கடைபிடிக்கிறோம் என்று நமக்கு அப்போஸ்தலர் அறிவிக்கிறார். ஆனால் புது சிருஷ்டியானது இன்னும் அவனது புதிய சரீரத்தை பெறவில்லை. அது பூரணமாக இருக்கும், முதலாம் உயிர்த்தெழுதலில் அதை பெறுவான். இடைப்பட்ட காலத்தில் அவனுக்கு மாம்ச சரீரம் மட்டுமே இருக்கிறது. அதில் தான் அவன் செயல்பட வேண்டும். மரணத்தில் "ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." (1 கொரிந்தியர் 15:44) பழைய சரீரம் தேவனுடைய பிரமாணத்தை கைக்கொள்ளுகிற அளவுக்கு பலமானதாக இல்லை. புது சிருஷ்டியின் உதவியுடன் கூட அது பலவீனமாகவே இருக்கிறது. ஏன்? ஏனெனில் நாம் பாவத்தில் கர்ப்பந்தரித்து துர்குணத்தில் உருவானோம். பாவமானது ஆறாயிரம் வருடங்களாக ஆளுகை செய்கிறது. பலவீனம் முதலானவை அநேக நூற்றாண்டுகளின் பாவத்தினால் தீவிரமாக இருக்கின்றன.

"மாம்சத்தினால் பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம்" என்ற கூற்றில் (வசனம் 3,4) அப்போஸ்தலர் நியாயப்பிரமாணம் பலவீனமானது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பவில்லை. ஏனெனில் அது பூரணமாக இருந்தது. பிரமாணம் திறமை உடையதாக இருந்தது. ஆனால் நியாயப்பிரமாண உடன்படிக்கை பலவீனமாக இருந்தது. நியாயப்பிரமாண உடன்படிக்கையில் குறை இருந்தது. தேவனுக்கு மனிதனுக்கான மீட்கும் பொருளை கொடுக்க முடியாத போதுமானதாக இல்லாத மத்தியஸ்தர் இருந்ததே அதற்கு பலவீனம். முன்னர் பலவீனமாயிருந்த அதே நியாயப்பிரமாண உடன்படிக்கை மேலான மத்தியஸ்தராகிய கிறிஸ்து இயேசுவின் கீழ் இதில் பலமுடையதாக இருக்கும்.

யூதர்களில் யாராவது நியாயப்பிரமாண உடன்படிக்கையை கைக்கொண்டிருந்தால் நித்திய ஜீவனை பெற்றிருப்பார்கள். ஏனெனில் இது தெய்வீக வாக்குத்தத்தமாக இருந்தது. “அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்.” (லேவியராகமம் 18:5; ரோமர் 10:5) தெய்வீக பிரமாணத்தை விரும்பி அதை கைக்கொள்ள முடிந்தவர்கள் முடிவில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். அதன்படி செய்யாதவர்கள் அனைவரும் நித்திய ஜீவனை அடையாமட்டார்கள்.

சிலுவையினால் அல்லாமல், நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் நீதி வரக்கூடுமென்றால் இப்படியாக வந்திருக்கும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். தகப்பனாகிய ஆதாம் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருந்தார். அவரது கீழ்ப்படியாமையினால் அவரது முழு இனமும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டது. அவர்களால் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள முடியவில்லை. ஆகவே தேவனுடைய ஏற்பாட்டினால், ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினால் மரணமும் உலகத்தில் பிரவேசித்தது போல, ஒரே மனுஷனாலே ஒப்புரவு, பாவத்திலிருந்து விடுதலை வருகிறது. (12 கொரிந்தியர் 15:21,22)

### நியாயப்பிரமாணத்தின் நீதி நம்மில் நிறைவேறி இருக்கிறது

இந்த உறுதி மொழியில் எப்படிப்பட்ட ஒரு ஆறுதலும் தேறுதலும் இருக்கின்றன! உண்மையிலேயே இவைகள் வாழ்க்கையில் ஆச்சரியமான வார்த்தைகள்! அவை நம்மை நம்பிக்கையுடன் ஊக்கமளிக்கிறது. தேவன் மாம்சத்தின் பரிபூரணத்திற்கு பதிலாக, மனதின் பரிபூரண நோக்கத்தை ஏற்றுக்கொண்டால், தேவன் நமக்காக குறித்திருக்கிற திட்ட நிலையை, பரிபூரண திட்ட நிலையை அடையக்கூடிய நம்பிக்கையை நாம் பெறுகிறோம். நாம் ஆவியின்படி அல்லது ஆவிக்கு இசைவாக நடக்கக்கூடும். நமது அழிந்து போகக்கூடிய மாம்சத்தைப் பொறுத்தவரை ஆவிக்குரிய தேவையின் அளவுக்கு நம்மால் நடக்க முடியாது. ஆனால் நமது சிந்தை ஆவிக்கு இசைவாக இருக்கக்கூடும். நமது நோக்கமும் பூரணமாக இருக்கக்கூடும். பரம பிதாவானவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்னவென்றால் பரிபூரணமான நோக்கமும் நம்மால் முடிந்த வரை மாம்சத்தின் மேல் நமது பூரணமான கட்டுப்பாடும் ஆகும்.

நமது கர்த்தர் மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார் என்ற கூற்று அவர் பாவத்தை தீர்த்து அதை தூக்கியெறியும்படி செய்தார் என்று பொருள்படுகிறது. உலகமானது நமது கர்த்தரால் இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தில் பாவமானது முன்னரே ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருந்தது. ஒரு பூரண மனிதனால் பாவம் செய்யாதிருக்க முடியும் என்பதை அவர் மெய்ப்பித்து காட்டியிருக்கிறார். இப்படியாக தெய்வீக பிரமாணத்தை பெரிதாக்கினார். பிரமாணத்தை பெரிதாக்க அவர் அதிகமாக செய்தாரா என்ற கேள்வி எழலாம். அவர் ஒரு ஏற்பாட்டை செய்தார். இதன் மூலம் நீதியின் ராஜ்யம் பாவத்தை நீக்கிப் போட்டு, நித்திய நீதியை கொண்டு வரும்.

யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணத்தின ஆவி புது சிருஷ்டியின் மேல் இருக்கிறது. ஆனால் நியாயப்பிரமாணம் அல்ல. நியாயப்பிரமாணத்தை தவிர்த்து நாம் கரத்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிக்கிறோம். தேவனுடைய பிரமாணம் புறக்கணிக்கப்படக்கூடாது. நீதி என்பது ஒரே பிரமாணத்தை பெற்றிருக்கிறது. அது யூதர்களுக்கு அவர்களது உடன்படிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. அந்த பிரமாணத்தை கடைபிடிக்கும் அவர்களது முயற்சியின் மூலம் அவர்கள் நித்திய ஜீவனை பெறவில்லை என்பதை பரிசுத்த பவுல் காண்பிக்கிறார். வேறு யாரும் அந்த வழியில் ஜீவனைப் பெற முடியாது. ஆனால் தேவன், கிறிஸ்து மூலம் ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார். அதன் மூலம் இந்த பிரமாணத்தின் சாபம் நீதியை திருப்திபடுத்துவதின் மூலம் ஒதுக்கி வைக்கப்படும். (ரோமர் 8:14) சபை கூட தியாக அன்பின் புதிய பிரமாணத்துக்கு கீழாக இருக்கிறது.

“பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.” (சங்கீதம் 50:5) இந்த புதிய ஒழுங்கை ஏற்றுக்கொண்டவர்கள் புது சிருஷ்டிகளாவதற்கு அனைத்து பூமிக்குரிய விருப்பங்களையும் விட்டு விடுகிறார்கள். பிரமாணத்தின் ஆவி இவற்றில் நிறைவேறுகிறது. ஏனெனில் அவர்கள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறார்கள். இவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட பங்காகிய ராஜ்யத்தின் உடன்சுதந்தரராகும் ஆசீர்வாதத்தை அடைய கிறிஸ்து மூலம் நாடுகிறார்கள். தற்காலத்தில் கிறிஸ்துவுடன் பாடுபடுவதே அவர்களது வேலையாக இருக்கிறது. அதன் இரத்தம் இந்த யுக முடிவில் இஸ்ரயேலருடனான புதிய உடன்படிக்கையை முத்திரையிட பயன்படுத்தப்படும். இஸ்ரயேலுக்காகவும் உலகத்திற்காகவும் புது உடன்படிக்கை திறக்கப்படும் போது அது அவர்களுக்கு மேலான மத்தியஸ்தர், அபிஷேகம் பண்ணப்பட்ட தலை மற்றும் சரீரம் மூலம் நித்திய ஜீவனுக்கான ஒரு சந்தர்ப்பம் என்று அவர்களுக்கு தெரிவிக்கும்.

R4870

## KEEPING OUR GARMENTS WHITE

## நமது வஸ்திரத்தை வெண்மையாக வைத்திருத்தல்

“ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புத்தகத்திலிருந்து அவனது நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர்கள் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.” வெளிப்படுத்துதல் 3:5

அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, தனிப்பட்டவர்கள் துன்பங்கள் அடைந்திருந்தாலும், ஆரம்பத்தில் சபை முழுமையாக தீவிரமான சோதனைகளுக்கு ஆளாகவில்லை. ஆனால் சத்தியம் பரவ ஆரம்பித்த போது, பகை ஏற்பட்டு, யூதர்கள் மாத்திரமல்ல, கிரேக்கர்கள், பேரரசர்களும் கவர்னர்களும் திரளானவர்களுக்கு ஆதரவாக இயேசுவின் பின்னடியார்களை துன்பப்படுத்தினார்கள். இதே போல சீக்கிரத்தில் இருக்கும் என்று எவ்வாறேனும் நாம் அறிகிறோம். நீண்ட காலமாக சுத்தமான சத்தியம் மனிதர்களுக்கு மறைவாயிருந்து, உலகத்தனமானது தேவபக்தியின் உருவத்தில் செல்வாக்குள்ள கூட்டங்களில் மேன்மை பெற்றிருந்தது. ஆனால் வேத வாக்கியங்கள் முன்னுரைக்கிறபடி இந்த யுக முடிவு நெருங்கும் போது வரும்

ஆபத்தின் காலங்களில் கர்த்தரின் சாட்சியாக வசனத்திற்காக உறுதியாக நிற்பவர்கள் பல்வேறு சாக்குபோக்குகளின் கீழாக போக்காடாக ஆக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அந்த வெளிச்சத்தின்படி நடக்கும் "வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு" எதிராக அடுத்த சில வருடங்களில் குறிப்பிட்ட அளவான துன்புறுத்தல் பெருகினால் நாம் ஆச்சரியப்படக்கூடாது. யோவான் அன்பான சீஷன், "சிறு மந்தையில்" நீண்ட காலம் வாழ்ந்த ஒரு அங்கமாக இருந்தார். நம்முடைய கர்த்தரின் கூற்றுக்கு இதுவே சந்தேகத்திற்கிடமில்லாமல் பொருளாக இருந்தது. "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?" (யோவான 21:22,23) ஆனால் யோவான் இருக்கவில்லை. உயிரோடிருக்கும் ஒரு வகுப்பாரை சில அம்சங்களில் குறிப்பவராக இருந்தார். அந்த வகுப்பார் ஆவியின் நிலையில் அடையாளங்கள் மூலம் யோவான் பார்த்த காட்சிகளையும் வெளிப்படுத்தல்களையும் புரிந்து கொள்ளும் கண்களினால் பார்க்கிறவர்கள்.

வெளிப்படுத்தல் 2 மற்றும் 3 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு செய்திகள் குறிப்பாக சபைகளுக்கு கொடுக்கப்பட்டவைகள், அதை பரந்த அளவில் பார்க்கும் போது கிறிஸ்துவின் முழு சபைக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. ஏழு என்பது பூரண எண். அதன் வரிசை சபையின் வெவ்வேறு சரித்திர காலங்களை குறிக்கிறது. இப்படியாக முடிப்பதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. இப்படியாக எபேசு சபை, இந்த செய்திகள் எழுதப்பட்ட காலமாகிய அப்போஸ்தலர் காலத்தில் சபையின் நிலைமையை குறிக்கிறது. லவோதிக்கேயன் சபை, சுவிசேஷ யுகத்தின் முடிவில், நமது காலத்தின் சபையைக் குறிப்பிடுகிறது. மற்ற சபைகள், ஆரம்பத்திற்கும் இப்போதைய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தின் பல்வேறு பகுதிகளை குறிப்பிடுகின்றன.

வேறு மாதிரி சிந்தித்தால், ஆசியா மைனரில் இருந்த ஏழு சிறிய சபைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது போல் இருக்கும். இவைகளைக் காட்டிலும் பெரிய மற்றும் செல்வாக்குள்ள சபைகளாகிய எருசலேம், அந்தியோகியா, கொரிந்து, கொலோசே, பிலிப்பு, தெசலோனிக்கேயா போன்ற இடங்களில் இருந்த சபைகளை புறக்கணிப்பது போல் ஆகும். மேலும் இந்த ஏழு சபைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற செய்திகளின் விபரங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஒரே சபையின் பல்வேறு கால அனுபவங்களுக்கு ஒத்திருக்கிறது. அதன் ஒவ்வொரு அங்கம் மற்றும் கிளைகளுக்கும் கர்த்தர் அக்கறை காட்டுகிறார். எண் ஏழு என்பது முழுமையை குறிக்கிறது என்ற கருத்து ஏழு பொன் குத்துவிளக்கு, ஏழு நட்சத்திரங்கள் முதலான அடையாளமான பிரதிநிதித்துவத்துக்கு ஒத்திருப்பதை நாம் காண்கிறோம்.

வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விவர குறிப்புகள் மற்றும் பொதுவான அறிவுரைகள் அங்கே குறிப்பிடப்பட்டுள்ள அந்த இடத்துக்குரிய சபைகளுக்கு மாத்திரமல்ல, "ஜெயங்கொள்ளுகிற" அனைவருக்கும் ஆகும். அவைகள் முழு சபையின் பல்வேறு காலக்கட்டத்தில் இருந்த சபைகளுக்கு மாத்திரமல்ல, சபையின் எந்த ஒரு காலத்தில் இருந்த பல்வேறு சபை வகுப்புகளுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

## நமது வஸ்திரங்களை சுத்தமாக வைத்திருப்பதின் முக்கியத்துவம்

நமது தலைப்பு வசனத்தின் வார்த்தைகள் சர்தை சபைக்கு அல்லது சர்தை சபையால் அடையாளமாக சொல்லப்பட்ட பொதுவான சபைக்கு சொல்லப்பட்டவை. இந்த சபையில் ஒரு தவறான நிலைமை, ஒரு தீட்டு இருந்தது. செய்யப்பட்ட மீறுதல்களுக்கு வருத்தப்பட்டு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்கவில்லை.

சர்தை சபையில் பெரும்பாலானவர்கள் தங்கள் வஸ்திரத்தை சுத்தமாக வைத்திருக்கவில்லை. ஆனால் "தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சில பேர் சர்தையிலும் உனக்கு உண்டு," தனது வஸ்திரத்தை மாம்சத்தின் மூலம் அசுசிபடாமல் காத்துக்கொள்ளவில்லை என்றால் பரம அழைப்பின் பந்தயப் பொருளை பெற முடியாது என்று நம் கர்த்தருடைய இந்த வார்த்தைகள் வலியுறுத்துவதாக தெரிகிறது. இப்படிச் செய்ய தவறுபவர்கள் ஜெயங்கொள்ளுகிற வகுப்பில் இருக்க மாட்டார்கள். இந்த வகுப்பாருக்கு தெரிந்தெடுக்கப்பட்ட ஆசீர்வாதம் கொடுக்கப்படும். "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு" வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். தன் வஸ்திரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளாதவர்களின் நாமம் ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கிப் போடப்படும். இதன் தொடர்பாக நாம் இதே அப்போஸ்தலர் யோவானின் வார்த்தைகளை ஞாபகத்தில் கொண்டு வருவோம். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கிறது. பழைய பாவங்களிலிருந்து மாத்திரமல்ல வஸ்திரத்தில் உள்ள அனைத்து கறைகளையும் நீக்குகிறது. அவர் கூறுவதாவது: "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்." (1 யோவான் 1:7) அறியாமல் செய்த அனைத்து கறைகளையும் நமது வஸ்திரங்களிலிருந்து சுத்திகரிக்கிறது. சுத்திகரிக்கப்பட்டவர்களாக தங்களை வைத்துக்கொள்ளாதவர்கள் "ஜெயங்கொள்ளுகிறவர்களாக" ஆக முடியாது. இந்த சுத்திகரித்தலை பெறுகிறவர்களின் நாமங்கள் மட்டுமே கிறுக்கிப் போடப்படாது.

நமது வஸ்திரம் சுத்தமாக இருக்கிறதா, இல்லையா என்பதை நமது திறமைக்கு தகுந்தவாறு பகுத்துணர வேண்டும். தனிப்பட்ட நபர் மட்டுமே எந்த அளவுக்கு தனது நடத்தைகளை கவனித்து, கர்த்தரிடம் தொடர்பு கொண்டு நமது வாழ்க்கையின் காரியங்கள் மற்றும் அந்த நாளின் நிகழ்வுகளை ஆராய்ந்து, குறைகளையும் மீறுதல்களையும் மன்னிக்கும்படி கேட்டிருக்கிறோமா என்பதை உணரக்கூடும். மற்றவர்களால் யூகிக்கத்தான் முடியும். அவர்களால் அறிய முடியாது. எந்த காரியங்கள் சரி, எந்த காரியங்கள் தவறு என்று அறியக்கூடிய அளவுக்கு போதுமான அறிவைப் பெற்றிருக்கிறோம். தவறான காரியங்கள் மிகவும் தவறானதாக காணப்படவில்லை என்றால் அது நமது

வஸ்திரத்தைப் பற்றி நாம் கவலையற்று இருக்கிறோம் என்பதை குறிக்கிறது. அதன் பலனால் சத்தியத்தில் குறைவான ஆர்வத்தையும், நமது வஸ்திரத்தை சுத்தமாக வைத்திருப்பதில் குறைவான ஆர்வத்தையும் ஜெபக் கூட்டங்களில் குறைவான ஆர்வத்தையும் உடையவர்களாக இருப்போம். அப்படிப்பட்டவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையே ஒரு மேகம் மற்றும் மெலிந்த நிலைமை வருவது நிச்சயம்.

விசுவாசமுள்ள "ஜெயங்கொள்ளுபவர்கள்" தங்களது வஸ்திரங்களை கவனித்து சுத்தமான வைத்திருப்பார்கள். "அவர்கள் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தவில்லை." அவர்கள் தங்களை "உலகத்தால் கறைபடாதபடிக்கு" காத்துக்கொள்ளுகிறார்கள். பாவம் அவர்களை கறைப்படுத்தி கர்த்தரிடமிருந்து பிரித்துவிட விரும்பமாட்டார்கள். ஒவ்வொரு கறைகளையும் நீக்குவதற்கு விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கேட்டு வேண்டுதல் செய்வார்கள். அவர்கள் இருதயப் பூர்வமான பாவத்தை எதிர்த்து, சத்துருவானவன் தங்களை பிடித்துக்கொள்ளாதபடி தங்களது வஸ்திரங்களை கறைபடாமல் வைத்துக்கொள்ள ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். "பொல்லாங்கன் அவர்களை தொடாதபடி" பார்த்துக்கொள்வார்கள். இவைகளெல்லாம் கிறிஸ்துவின் சித்தத்துக்கு தங்கள் சித்தத்தை முழுவதுமாக ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கிறது. அலுர்கள் "அவரோடு கூட மரித்தவர்கள்." ஆகையால் அவர்கள் பாவத்தை செய்ய விரும்பமாட்டார்கள்.

### விலையேறப்பெற்ற இரத்தம் மட்டுமே சுத்திகரிக்கும்

சர்தை சபையை சார்ந்த அநேக ஜனங்கள் திரள் கூட்டத்தாரை சேர்ந்தவராயிருந்து, "ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்ப" வேண்டியிருந்தது. ஏனெனில் அவர்கள் சாத்தியமான மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையில் அவர்கள் இல்லை. அந்த நியமம் வெளிப்படையாக சர்தை சபைக்கு மாத்திரமல்ல பொதுவான சபைக்கும் பொருந்தும். "இடுக்கமான பாதையின்" கஷ்டங்கள் ஜெயங்கொள்ளப்பட வேண்டியவைகளாயிருக்கின்றன. இந்த கஷ்டங்கள் தான் இடுக்கமான பாதையை உண்டாக்குகிறது. தேவனுடைய காரியங்களில் நமது மாம்சத்தின் எதிர்ப்புகள், உலகத்தின் பொதுவான எதிர்ப்புகள் மற்றும் சத்துருவானவன் நமக்கு வைக்கும் கண்ணிகள் ஆகியவையே அந்த கஷ்டங்கள். சுயநல அன்பு, புகழ், உலகப்பிரகாரமான செழிப்பு, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட விசுவாச கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும்.

இப்படியாக நமக்கு வஸ்திரத்தை வழங்குவதின் மூலம் தேவன் நமக்காக செய்த ஏற்பாடு எவ்வளவு கிருபையுள்ளதாக இருக்கிறது! அது வருத்தப்பட்டு மன்னிப்பு கேட்ட கடந்த கால சகல களங்கங்கள் மற்றும் அதேபோல அபூரணத்தினால் தற்காலத்தில் அறியாமல் செய்தவைகளை மூடுகிறது. இந்த ஏற்பாடுகளின் கீழ் கர்த்தருடைய பிள்ளைகள் மிகவும் ஜாக்கிரதையுடன் நடந்து ஒவ்வொரு அடியிலும் சுற்றிலும் பார்த்துக்கொண்டு தங்களது வஸ்திரங்களை கறைபடாமல் உலகத்திலிருந்து காத்துக்கொள்ள இயலும். ஆனால், ஐயோ, எப்படி மிகச் சிலர் கடந்த கால வாழ்க்கையில், தங்களது வஸ்திரங்களை வெண்மையாக வைத்துக்கொள்ள உறுதியளிக்கும் இந்த உயர்ந்த நிலை அளவுக்கு, அவர்களது கடந்த கால கிறிஸ்தவ வாழ்க்கையை எப்பொழுதும் வாழ்ந்திருக்கக்கூடும்!

இருதயத்தின் பரிபூரண பரிசுத்தத்தின் ஏதாவது விலகல், வஸ்திரத்தின் ஒரு கறையை, ஒரு அழுக்கை ஏற்படுத்தும் என்பதை அறிந்து, அப்படிப்பட்ட கறையை அல்லது அழுக்கை நீக்கி மறுபடியும் வெண்மையாக வைத்திருக்க இயலுமா என்று விசாரிக்க நாம் அக்கறை கொள்ள வேண்டும். தேவனுக்கு ஸ்தோத்திரம், ஆம்; நமது வஸ்திரங்களிலிருந்து கறைகளையும் சுருக்கங்களையும் நீக்கி, ஆரம்பத்தில் இருந்தது போல மீண்டும் வெண்மையாக்க ஒரு வழி இருக்கிறது. கறைகளை நீக்குவது விலையேறப்பெற்ற இரத்தம். அப்போஸ்தலர் கூறுவதாவது: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

### நம்மை நாமே நிதானிப்போமாக

நமது அனைத்து முயற்சிகளும் நமது ஒரு சிறு கறையையும் நீக்க முடியாதிருக்கும். அஹத "விலையேறப்பெற்ற இரத்தம்" மட்டுமே நீக்க முடியும். நமது ஆண்டவரின் மன்னிப்பையும் நமது வஸ்திரத்தின் சுத்திகரிப்பையும் உணர்ந்து உடனே மனந்திரும்புதலின் ஒழுங்கை நாடவேண்டும். இல்லையென்றால் நமது ஊக்கமான ஜெபத்தினால் நமது ஆண்டவர் நமது வஸ்திரத்தை சுத்திகரிப்பதை பதிலாக எதிர்பார்க்கலாம். எனினும் அவர் நம்மை நீதியில் திருத்தவும் பலவீனத்தில் இருக்கும் நமது குணலட்சணத்தை பலப்படுத்தவும் நமக்கு சில தண்டனைகளைக் கொடுப்பார். இதை போதிக்க அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்." (1கொரிந்தியர் 11:31,32)

கறையற்ற நீதியின் வஸ்திரத்தை பெற்றிராதவர்களை தேவனுடைய கிருபை பரலோக பூரணத்திற்கு அனுமதிக்காது. தங்களது வஸ்திரங்களை வெண்மையாக வைத்திருப்பது குறித்து அக்கறைப்படாதவர்கள், பரலோக கிருபைகளில் பங்கு பெறுவதற்கு முன்னர் அவர் கடுமையான

அனுபவங்களில் வைக்கப்பட வேண்டும் என்று நமக்கு காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த கடுமையான அனுபவங்கள் மிகுந்த உபத்திரவத்தில் தங்கள் வஸ்திரங்களை தோய்த்து வெளுக்கிற அடையாளத்தினால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நோன்பினாலோ பாடுகளினாலோ வஸ்திரம் சுத்தகரிக்கப்படும் என்று காண்பிக்கப்படவில்லை. "ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம்" மட்டுமே சுத்தகரிக்கும் செயல்திறனை உடையதாக இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக அநேகர் சுத்திகரிக்கப்படுவார்கள், பரிசுத்தமாக்கப்படுவார்கள். அவர்களது புத்தியீனமான மார்க்கத்தை உணர்ந்து கர்த்தரிடம் அவரது உதவிக்காக முறையிடும் போது, உலகத்துடனான தொடர்பினால் அழுக்கான அவர்களது வஸ்திரம், எல்லா குற்ற கறைகளும் சுத்திகரிக்கப்படும்.

இவைகள் கர்த்தரின் புகழை பாடும் என்பதில் நாம் களிகூருகிறோம். அவரது ஆச்சரியமான கிருபையில் சந்தோஷப்படுகிறோம். அவர்களது வஸ்திரம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கப்பட்ட பிறகும் ஆபத்தின் காலத்தில் கிரீடத்தை அணியமாட்டார்கள். ஆனால் கடைசியில் ஜெயங்கொண்டு, கிறிஸ்துவின் மூலம் ஜெயங்கொண்டதற்கு அடையாளமாக "குருத்தோலை" வழங்கப்படும் என்பதை நாம் கவனிக்கிறோம். அவர்கள் கிறிஸ்து தலையாக இருக்கக்கூடிய ஜீவனுள்ள ஆலயமாக இருக்க முடியாவிட்டாலும், அவர்கள் அந்த ஆலயத்தின் ஊழியக்காரர்களாக இருப்பார்கள் என்று நாம் சொல்லப்படுகிறோம். அவர்கள் சிங்காசனத்தில் உட்கார முடியாவிட்டாலும், "சிங்காசனத்திற்கு முன்பாக" இருந்து கொண்டு ஊழியம் செய்யக்கூடிய சலுகையை பெறுவார்கள். மாபெரும் மற்றும் மகிமையான சலுகைகள் அவர்களுடையதாக இருக்கும். ஆனால் மாபெரும் பரிசை இழப்பார்கள். அனுகூலமாக காணப்படுகிற தற்கால நன்மைகளுக்காக அதை விற்றுவிட்டார்கள். அது திருப்தியற்றதாக இருந்து கசப்பான பலன்களை கொண்டு வருகிறது. பரிசுத்தத்திற்காக, அர்ப்பணத்தை அவரது சித்தத்தின்படி பலமாய் நிறைவு செய்ய எப்படிப்பட்ட அறிவுரை!

## R4871 THE CHRISTIAN ATTITUDE IN THE DUTIES OF LIFE

## வாழ்க்கையின் கடமைகளில் கிறிஸ்தவனின் மனப்பாங்கு

"(அலுவலில்) அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்." ரோமர் 12:11

அலுவல் என்ற வார்த்தை மிகவும் பரந்த அர்த்தமுடையது. நாம் எதைச் செய்தாலும் சகலத்தையும் கர்த்தருக்கென்று செய்ய வேண்டும். கிறிஸ்தவனுக்கு வாழ்க்கையின் பிரதானமான வேலை தேவனை மகிமைப்படுத்துவது, கர்த்தரின் இயக்கத்திற்கேற்ப, அவருக்கு ஊழியம் செய்வது, சகோதரர்களுக்கு ஊழியம் செய்வது, சத்தியத்துக்கு ஊழியம் செய்வது, நீதிக்காக ஊழியம் செய்வது, அவனுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக, "யாவருக்கும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்வது" ஆகும். நமது வசனத்தில் உள்ள அலுவல் என்ற வார்த்தை கர்த்தர் அங்கீகரிக்கிற எந்த வகையான வேலையை, தொழிலைக் குறிக்கும். மதுபான தொழிலில் அல்லது புகையிலை தொழிலில் அசதியாயிராதீர்கள் என்று நாம் சொல்லக்கூடாது. கர்த்தரின் அங்கீகாரம் இருக்கிறது என்று நாம் நம்புகிற தொழிலில் தான் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

"அசதியாயிராமல்" என்கிற வார்த்தை சோம்பலாயிராதே என்பதற்கு சமமானது. எந்த காரியமும் சரியானபடி செய்யப்பட வேண்டும். அது யாருடைய கடமையாக அல்லது சலுகையாக இருக்கிறதோ அதை அவன் அறிவுடனும் சுறு சுறுப்பாகவும் மிகுந்த கவனத்துடனும் செய்ய வேண்டும் என்பதே அப்போஸ்தலருடைய எண்ணமாக தெரிகிறது. செய்வது பிரயோஜனமானது என்றால் அந்த பிரயோஜனமானது வைராக்கியத்துடனும் நன்றாகவும் செய்யப்பட வேண்டும். நமது தொழில் பிரயோஜனமானதா என்பதை நாம் முதலில் பார்க்க வேண்டும் என்பது அப்போஸ்தலரின் கருத்தாக இருக்கிறது. இரண்டாவது அதை உண்மையுடன் தொடர்ந்து நடத்த வேண்டும். நமது சொந்த தேவைக்கோ அல்லது கர்த்தருடைய வேலைக்கோ பணம் கொடுக்கக்கூடியதாக இருந்தால் அந்த தொழில் சக்தியுடனும் சுறுசுறுப்புடனும் அவருக்கு செய்வது போல செய்ய வேண்டும். நாம் எந்த வழியிலும் அசதியாகவோ, சோம்பலாகவோ இருக்கக்கூடாது.

நமது உலக சம்பந்தமான தேவைகளுக்கு நமக்கு பணம் தேவைப்படுகிறது. அதற்கு எவ்வளவு மணி நேரம் ஒதுக்க வேண்டும் என்பது தனிப்பட்டவர்களை பொருத்து இருக்கிறது. ஒவ்வொன்றும் எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்று அவனே தீர்மானிக்க வேண்டும். நமது ஜீவனை கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுக்கிறேன் என்று அவரிடத்தில் அர்ப்பணம் செய்த பிறகு நாம் கொடுக்க வேண்டியது குறைவாகவே இருக்கும். நாம் "காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ள" பார்க்க வேண்டும். இந்த வாழ்க்கையில் வேலைகளிலிருந்து முடிந்தவரை நியாயமான நேரத்தை சத்தியத்தை அறிவிக்கும் விசேஷித்த ஊழியத்துக்கு ஒதுக்க வேண்டும். இதற்கு நமது குடும்பத்தை மற்றவர்களது பொறுப்பில் விட்டு விட வேண்டும் என்று பொருளல்ல. நாம் அவர்களை சரியானபடி கவனித்துக்கொள்ள வேண்டும். நாம் அதிக பாரத்தை சுமக்கக் கூடாது. நம்மை சார்ந்து இருக்கிறவர்களுக்கு சரியான கவனிப்பை கொடுக்க வேண்டும். உணவும் உடையும் போதுமான அளவில் கிடைத்தால் திருப்தி அடைய வேண்டும். வாழ்க்கையின் நீண்ட காலத்திற்கு சேர்க்க விரும்பக்கூடாது.

அனல் என்ற வார்த்தை சூடான, கொதிக்கக்கூடிய என்பதை குறிக்கிறது. நாம் எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று செய்வது போல இருதயப்பூர்வமாக. நமது முழு பலத்தோடு செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். வேலையை எடுத்துக்கொண்டவர் அந்த வேலையை அக்கறையில்லாமல் அசதியாக செய்பவரானால் அந்த வேலை அவரை வாழ்க்கை முழுவதும் இழுத்துச் செல்லும். நாம் எதைச் செய்தாலும் சூட்டோடு செய்ய வேண்டும். நாம் கர்த்தருடையவர்கள், நாம் என்ன தொழில் செய்தாலும் அது கர்த்தருடையது. நாம் நமது வேலைகளில் உற்சாகத்துடன் இருந்தால் தேவன் அதில் பிரியப்படுவார். மனசாட்சிக்கு எதிரான வேலையில் ஒருவர் இருந்தால் அதை அவர் விட்டு விட்டு வேறு வேலையை உலகில் பார்க்க வேண்டும்.

### ஆர்வத்துடன் அதிக சுமையை எடுத்துக்கொள்ளக்கூடாது

கர்த்தருடைய பிள்ளை கவலைப்படக்கூடாது அல்லது

நாளையைப் பற்றி கவலைப்படக்கூடாது. எனினும் நண்பர்களுக்கும் அண்டை வீட்டாருக்கும் தேவைப்படும் போது கொடுப்பதற்கு நாம் தயாராயிருக்க வேண்டும் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. தற்கால உடன் தேவைகளுக்கு எல்லா வளங்களையும் பயன்படுத்தி விடக்கூடாது. நமது சுய கட்டுப்பாட்டை பயன்படுத்தி எதிர்காலத்தில் நல்ல பலன் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஒழுங்கு, உணவு மற்றும் ஆடைகளுக்கும் பொருந்தும். பொருட்களை வைக்கும் அறை சிறியதாக இருந்தால், அடுத்த ஆடைத் தொகுதி எங்கிருந்து வரும் என்று ஆச்சரியப்படக்கூடாது. இன்னொரு ஆடைத் தொகுதியை பெற்றிருந்தால் அது திருடப்படலாம். நாம் சத்தியத்தை ஏற்றுக்கொண்டால், அண்டை வீட்டாரும் நண்பர்களும் எனக்கு எதிராக திரும்பினால் நான் என்ன செய்வேன் என்று ஆச்சரியப்படக்கூடாது. சத்தியத்தினிமித்தம் நான் அவமதிப்பு அடைந்தால் என்ன செய்வது? இவை எல்லாவற்றையும் கர்த்தரிடம் விட்டு விட வேண்டும். நமக்கு துன்பங்கள் தேவைப்பட்டால், அவை நமக்கு வரும்படி அவர் செய்வார் என்று நாம் நம்பிக்கைக்கொள்ள வேண்டும். இந்த வழியில் சத்தியத்தை நமக்கு பிரயோஜனமாயிருக்கும்படி நம்மை தெரிந்துக்கொண்டதற்கு நாம் சந்தோஷப்பட வேண்டும். “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாரும் துன்பப்படுவார்கள்.” (2 தீமோத்தேயு 3:12)

மறுபுறம் தேவன், நாம் வாழ்க்கையில் அக்கறையில்லாமல் செல்ல வேண்டும், அதிர்ஷ்டம் உள்ளவன் சந்தோஷமாக இருக்கட்டும் என்றும் தேவன் நோக்கங்கொள்ளவில்லை. நாளுக்கான சரியான எண்ணத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். இன்றைக்கான கடமைகள் என்ன? கவனிக்க வேண்டியது என்ன? வேதவாக்கியங்கள் கூறுவது போல, “அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் பண்ணுங்கள்.” அதிக வைராக்கியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாளைக்கு நடப்பதைப் பற்றி கவலைப்படாமல், நாளைக்கு தேவன் நம்மோடிருப்பார், நமக்கு தேவையான கிருபையை அளிப்பார் என்று விசுவாசிக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்துடன் வாழ்ந்தால், ஒவ்வொரு நாளைக் குறித்து சிந்திக்கக்கூடிய பெரிய விஷயங்களை பெற்றிருப்போம். நாளைப் பற்றி கவலைப்பட அவசியமாயிருக்காது. நாம் செய்வதற்கு நிறைய இருக்கிறது. தற்கால கஷ்டங்களுக்கு அக்கறை செலுத்தி, கிருபாசனத்திற்கு செல்வோமானால் இன்றைய உதவிக்காக கிருபையும் பலத்தையும் பெறுவோம்.

நமது இருதயத்தின் சிந்தனை, கர்த்தருக்கான ஊழியம், நீதியை ஊக்குவித்தல் மற்றும் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற ராஜ்யத்தை அடைதல் போன்றவையாக இருந்தால், நாம் எதிர்காலத்தை பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம் என்று நமக்கு கர்த்தர் உறுதியளிக்கிறார். நாம் அவரது சீஷர்களாக அனுதினமும் தேவையான சோதனைகளையும் மற்றும் துன்பங்களையும் பெறுவோம். “இடுக்கமான பாதையில்” செல்ல நாம் நாடுவதால் மணவாளனின் கரங்களில் நாம் சாய்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கும். அந்தந்த நாளுக்குரிய பாடுகள் போதும். அனுதினமும் நமக்கு தேவையான கிருபை நமக்கு கிடைக்கும் என்ற வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் கர்த்தருக்கு ஊழியம் பண்ணுவது பெரிய சலுகை. நாம் எந்த அளவுக்கு பூமிக்குரிய காரியங்களை தியாகம் செய்கிறோம் என்று பார்க்கிறார், அப்பொழுது நாம் “நன்றாய் செய்தாய்” என்ற வார்த்தையை கேட்போம், அவரது அங்கீகாரத்தை பெறுவோம்.

ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடுகிற அர்ப்பணம் செய்த அனைவரும் கர்த்தருடைய வேலையில் வைராக்கியமும் செயல்களும் உள்ளவர்களாக காணப்படுவார்கள். நாம் ஒதுக்கக்கூடிய அல்லது தவிர்க்கூடிய உலக அக்கறை மற்றும் வில்லகங்களின் கீழே நமது ஒன்று அல்லது அநேக தாலந்துகளை புதைத்து வைத்தோமானால், உலகப்பிரகாரமான நம்முடைய அல்லது குடும்பத்தின் குறிக்கோள்களின் கீழாக புதைத்து வைத்தோமானால், அல்லது நமது அர்ப்பணம் பண்ணப்பட்ட காலத்தை விஞ்ஞானம், தத்துவம், இசை அல்லது கலை அல்லது தொழில், அரசியல் அல்லது சந்தோஷங்கள், ஆடம்பரம், உணவு ஆகியவைகளில் வீணடித்தால், விசுவாசமற்ற ஊழியக்காரர்களைப் போல நாம் சீக்கிரத்திலோ பின்னரோ “புறம்பான இருளுக்கு” செல்வோம்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.
வெளியிடுபவர் :
சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**